
# பிரதேச சாகித்திய விழா
# ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල

## சிறப்பு மலர்
## විශේෂ කලාපය



**பிரதேச செயலகம்**
**பட்டணமும், சூழலும்**
**திருக்கோணமலை**

**ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය**
**නගර හා කඩවත්**
**ත්‍රිකුණාමලය**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சாகித்திய விழா
# 2005

பட்டணமும், சூழலும் பிரதேச செயலகம்

திருக்கோணமலை

# ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල

2005

**ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය**

**නගර හා කඩවත්**

**ත්‍රිකුණාමලය**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர்
திரு. சி. ரங்கராஜா அவர்களின்

# ஆசிச்செய்தி.

கலை, இலக்கியம் என்பன சமுதாய நாகரீக வளர்ச்சியில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. உயர்ந்த இலக்கியம் என்று போற்றப்படுபவை சமுதாயத்தை சீரான, செம்மையான நிலைக்கு இட்டுச் செல்பவையாகும்.

''போலச் செய்வது'' இலக்கியம் என்றார் அறிஞர் அரிஸ்ரோட்டில். அவ்வவ்கால சமுதாய நிலையை படம் பிடித்துக் காட்டுவது தான் கலை இலக்கியம். கலை இலக்கியம் சமுதாயத்தின் அடிநாதமாக, ஆணி வேராக உள்ளதென்றால் மிகையாகாது.

பிரதேச மக்களின் சிந்தனை வளர்ச்சிக்கும் அவர்களது கலை இலக்கிய ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையிலும் நடாத்தப்படும் பிரதேச சாகித்திய விழா மிகவும் பாராட்டுக்குரியதாகும். விழாவிலே சிறப்பு மலர் வெளிவருவதும் விழாவை மேலும் மெருகூட்டக்கூடியதாய் அமைகின்றது.

பிரதேச சாகித்திய விழா பிரதேச மக்களின் ஒற்றுமையை யும், சாந்தி சமாதானத்தையும் ஏற்படுத்த வழி செய்யும் என்பதில் ஐயமில்லை.

விழா சிறப்பாக நடந்தேறுவதற்கும், விழாவிலே வெளிவரும் சிறப்பு மலர் சமுதாய நலனுக்குரிய ஆக்கங்களுடன் வெளிவந்து மக்கள் நலனுக்குதவவேண்டும் என்றும் குறிப்பிடுவதோடு விழா இனிதே இடம்பெற எனது வாழ்த்துக்களையும், நல்லாசியினையும் தெரிவிக்கின்றேன்.

சி. ரங்கராஜா,
பிரதம செயலாளர்,
வ.கி.ம.
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்.
திரு. ஆர். தியாலிங்கம் அவர்களின்

# ஆசிச் செய்தி

மனித நாகரீகம் ஆரம்பித்த காலத்திலிருந்து நாகரீக மேம்பாட்டில் கலை இலக்கியங்களே பிரதான இடத்தை வகிக்கின்றது மக்களின் பாரம்பரிய பண்பாடுகள், ஆடல்கள், பாடல்கள் அனைத்தையும் உள்ளடக்கியது தான் கலை இலக்கியங்களாகும்.

ஒவ்வொரு பிரதேச மக்களும் தங்களுக்கென தனித்துவமான கலைப் பாரம்பரியங்களை பண்பாடுகளை கொண்டவர்கள் கலைப் பாரம்பரியங்களை வளர்த்தெடுப்பதில் பிரதேச கலை இலக்கிய மன்றங்கள், கலை இலக்கியவாதிகள் முதல் நிலை வகிக்கின்றனர்.

பிரதேச சாகித்திய விழா எடுப்பதும் விழாவிலே இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும், சான்றிதழும் வழங்குதலும் கலையாக்கங்களை மேடையேற்றுவதும் கலை இலக்கியத்துறைக்கு சேவை செய்தவர்களை கௌரவிப்பதும் கலை இலக்கிய வளர்ச்சிக்கு ஊன்று கோலாக அமைந்துள்ளது என்று குறிப்பிடலாம்.

இவ்வாறான நல் நோக்கத்துடன் நடத்தப்படும் விழா எல்லாவகையிலும் சிறப்புடன் நடைபெறுவதற்கு எனது நல்லாசிகள் உரித்தாகுக.

செயலாளர்
கல்வி பண்பாட்லுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு
வா.கி.மா
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ත්‍රිකුණාමලය දිසාපති හා දිස්ත්‍රික් ලේකම්
## කේ. පී. ලීලානන්ද මහතාගේ සුභපැතුම් පණිවුඩය

ත්‍රිකුණාමලය නගර හා කඩවත් ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය මගින් 8 වැනි වරටත් ඉදිරිපත් කරනු ලබන සාහිත්‍ය කලා උළෙලේ සමරු කළාපයට පණිවුඩයක් නිකුත් කිරීමට ලැබීම ගැන මා අතිශයින්ම සතුටු වෙමි.

අප රටේ සිංහල දෙමළ හා මුස්ලිම් යන ජන කොටස්වල සංස්කෘතිය යම් තාක් ප්‍රමාණයකට හෝ ඉතිරිව පවතින්නේ නම් ඒ සාහිත්‍යය ඊට බද්ධවී තිබෙන බැවිනි. සාහිත්‍ය යනු විශ්ව භාෂාවකි. එයද දැන් දැන් අප අතරින් පිරිහෙමින් පවතින මෙවන් යුගයක අති දුෂ්කර වූ ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කයේ ත්‍රිකුණාමලය නගර හා කඩවත් ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය මගින් සාහිත්‍ය කලාව නගා සිටුවීම සඳහා දක්වන උනන්දුව හා ඕනෑකම පිළිබඳව මගේ කෘතඥතාව ප්‍රාදේශීය ලේකම් ඇතුළු කාර්ය මණ්ඩලයට පිරි නැමීමට මෙය අවස්ථාවක් කොට ගනිමි.

දිගු කලක සිට කුරිරු යුද්ධයෙන් පීඩා විඳි ත්‍රිකුණාමලය ප්‍රදේශයේ සිංහල දෙමළ මුස්ලිම් මැලේ හා බර්ග ආදී ජන කොටස්වල ගිලිහීගිය විශ්වාසය යළි ඇතිකර සාමකාමී මාවතකට පිවිසෙමින් සිටින මෙවන් අවධියක ඔබ කාර්යාලය මගින් සාහිත්‍ය උළෙලක් පැවැත්වීමෙන් ජාතීන් අතර සමගිය හා සහජීවනය ඇති කිරීමටත් ඒ තුලින් රටට සාමය උදා වීමටත් මෙය අත්වැලක් වේවායි ප්‍රාර්ථනා කරමි.

කේ. පී. ලීලානන්ද
දිසාපති හා දිස්ත්‍රික් ලේකම්
ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர்

எம்.கே. எம். ஹனிபா அவர்களின்

# ஆசிச்செய்தி

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசச் செயலகத்தினால் வருடாந்தம் சாகித்திய விழா நடத்தப்பட்டு வருகின்றது. இவ்விழாவில் சாகித்தியமலரும் வெளியிடுவது வழக்கமாகும். அதே போன்று இவ்வருடமும் நடைபெறும் சாகித்திய விழாவில் வெளியிட இருக்கும் சாகித்திய விழாமலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சமூகத்தில் உள்ளவர்களில் ஒரு சிறிய வீதத்தினரே எழுத்துத்துறையில், கலை இலக்கியத்துறையில் ஆர்வமுள்ளவர் களாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் கதை, கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள், நாடகங்கள், போன்ற இலக்கியப் படைப்புக்களை ஆக்குபவர்களாகவும் இருக்கின்றனர், இது அவர்களுக்கு இறைவன் கொடுத்த வரம் என்று தான் கூறவேண்டும். இவர்களது இப்படைப்புக்களை வாசிக்கும் இலக்கிய சுவைஞர்கள் சமூகத்தில் அதிகமாக உள்ளனர். இவர்கள் வாசித்துப் பல பயன்களை அடைகின்றனர். மகிழ்ச்சியடைகின்றனர்.

இந்தவகையில் எழுத்தாளர்களை, இலக்கியவாதிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதும் அவர்களது படைப்புக்களை பாதுகாப்பதும் தொடர்ந்து அவர்கள் இப்பணியைச் செய்வதற்கு உற்சாகப்படுத்தப்பட வேண்டியதும் எமது கடமையாகும். இதற்காக இவர்கள் கௌரவிக் கப்படவேண்டும். பாராட்டப்படவேண்டும்.

இந்த அருமையான கைங்கரியத்தை பட்டினமும் சூழலும் பிரதேசச் செயலாளரும், அவரது ஒழுங்கமைப்புக்குழு உறுப்பினர் களும் தொடர்ச்சியாக சிறப்பாக செய்து வருகின்றார்கள். இதற்காக இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். வருடாந்தம் தொடர்ந்தும் இப்பணிதொடர வேண்டும். வளரவேண்டும். வாழவேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

''வாழ்க இலக்கியம்! வளர்க இலக்கிய நெஞ்சங்கள்!"

எம்.கே.எம் ஹனீபா,
சிரேஸ்ட உதவிச்செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளரும், பிரதேச சாகித்திய விழா குழுத் தலைவருமாகிய சுந்தரம் அருமைநாயகம் அவர்களின்

# ஆசிச் செய்தி

சமுதாய மேம்பாட்டிற்கும், சமுதாய வளர்ச்சிக்கும் கலை இலக்கியங்கள் பெரிதும் பயன்பாடுடையதாய் இருக்கின்றது. மனித விழுமியங்களைப் பேணுவதிலும், அறிவூட்டுவதிலும் இவை முக்கியத்துவம் பெறுகின்றன. நிறைமொழி மாந்தர்கள் சமுதாய வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் இருந்து எமது வாழ்வியலுக்கு இட்டுச் சென்ற காப்பியங்கள், கலை பொக்கிஷங்கள் இன்றும் நிலைத்து நின்று வழிகாட்டுகின்ற தென்றால் அவை தன்னகத்தே கொண்டுள்ள மானிட மேம்பாட்டு கருப்பொருள்களே என்று குறிப்பிடலாம்.

காலத்திற்கேற்ற கலை இலக்கியங்கள் உருவாவதற்கு நாம் மிகவும் கவனம் செலுத்துவதோடு கலை இலக்கிய கர்த்தாக்களை ஊக்குவிக்க வேண்டும். உள்ளத்திலே எழும் உண்மை ஒளியினை நல்வழிக் கதிர்களாக வெளிக்கொணர்பவர்கள் இலக்கிய கர்த்தாக்களே. சமுதாயத்தில் கண்டறிந்த சுவைத்த அனுபவித்த அனுபவங்களும் நடைமுறைகளுமே கலை இலக்கியங்களாக வடிவம் எடுக்கின்றன.

எனவே கலை இலக்கியங்கள் பாதுகாக்கப்படுவதோடு கலை இலக்கியம் படைப்பாளர்களுக்கு ஊக்கமும் உதவியும் வழங்க வேண்டி இருப்பது அவசியமாகும்.

இதனை நோக்காகக் கொண்டே கலை இலக்கிய விழாக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தப்பட்டு வருகின்றன. வழமை போல் இம்முறையும் பிரதேச சாகித்திய விழாவினை ஏற்பாடு செய்துள்ளோம். விழாவிலே இலக்கியப் போட்டிகளுக்குப் பரிசும், சான்றிதழ்களும், முதிர்ந்த கலை, இலக்கிய கர்த்தாக்களை கௌரவிக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இவ் விழாவை நடத்துவதற்கு முன்னின்று உழைத்த அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவிப்பதோடு விழா நடந்தேற எனது நல்லாசியினையும் வழங்குகின்றேன்.

நன்றி.

சுந்தரம். அருமைநாயகம்
பிரதேச செயலாளர்
பட்டணமும், சூழலும்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்ட சமய, கலை, கலாசார பாரம்பரியம்

**கலாபூஷணம். சைவப்புலவர்**

**அ.பரசுராமன் (ஜே.பி)**

**ஓய்வு பெற்ற பிரதேச கல்விப்பணிப்பாளர் ஈச்சிலம்பற்று**

வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம். இதில் திருகோணமலை மாவட்டம் சிறப்பான சமய, கலை, கலாசார பாரம்பரியங்களுக்கு உரியது. இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் மொழிப் பிரச்சனையோ, சிறுபான்மை பெரும்பான்மை என்ற வேறுபாடுகளோ இன்றி சகல இனத்தவர்களும் ஓரின மக்களாக வாழ்ந்த காலம் அது.

இலங்கையில் பல இனமக்கள் வாழ்கின்றார்கள். பல சமயங்கள் வளர்ச்சியடை கின்றன. ஒவ்வொருவரும் தமது மத அடிப்படையில் பல கலாசார நிகழ்வுகளோடு வாழ்ந்து வருவதைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இங்கு வாழும் இந்துக்களைப் பொறுத்தவரை அன்றாட வாழ்வில் சமயம் பின்னிப் பிணைந்ததாக வழிபாடுகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், இன்பதுன்ப நிகழ்வுகள் என்பன இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

பல இனங்கள் வாழும் இந்நாட்டில் இந்துக்கள் தமது கலாச்சார நிகழ்ச்சிகளைப் பரத நாட்டியம், கும்பம் கோலாட்டம், காவடி, பாற்குடம் எடுத்தல், அம்மன் கூத்து கிருஷ்ண ஜயந்தி, உறியடி போன்றவற்றால் வெளிப்படுத்தினர். இதே போல் பௌத்தர்கள், பெரகரா, கண்டியன் நடனம், வெசாக் போன்ற நிகழ்வுகளையும், முஸ்லீம்கள் பஞ்சா, றபானம் அடித்தல் போன்ற நிகழ்வுகளையும், வெளிப்படுத்துவதோடு, பாரம்பரியமாகவும் அமைந்துள்ளது.

தமிழர்களின் பண்டிகைகளும், விழாக்களும் முக்கிய இடம் பெறுகின்றன. பாரம்பரியக் கலைகளில் ஒன்றான கும்பம் ஆடுதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடமாக புரட்டாதி நவராத்திரி காலத்தில் திருமலை மாவட்டத்தில் சிறப்பாக நடை பெற்று வருகின்றன. நவராதிரி விழாவில் 10ஆம் நாள் பூசையில் வைக்கப்பட்ட கும்பம், கரகம் என்பவற்றிற்கு உருக்கொடுக்கப்பட்டு மேளதாளங்களுடன் வீதி வழியாக எடுத்துச் செல்லப்படட்டு, இறுதியில் கும்பம் சொரிவர்.

திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் பாரம்பரியக் கலைகளில் கொம்பு விளையாட்டும் ஒன்று, தம்பலகாமம் பள்ளிக்குடியிருப்பு, மல்லிகைத்தீவு, ஈச்சிலம்பற்று போன்ற பிரதேசங்களிலும் இக்கலையாடல் பெருவழக்காக் காணப்பட்டு வருகின்றது. கொம்பு முறிப்பு ஒரு கிராமத்தில் தொடங்குவதற்கு முன்னர் இரு பிரிவுகளாக அக்கிராம மக்கள் பிரிவர். இதனை வடசேரி, தென்சேரி, என அழைப்பா. தென்சேரி கண்ணகிகட்சி (அம்பாள் கட்சி) வடசேரி கோவலன் கட்சி (சுவாமிகட்சி) என்றும் அழைப்பர்.

அம்மை, வைசூரி, கண்நோய் முதலான கொடிநோய் நொடியினின்றும் நீங்கி மழைவளமூலம் செல்வம் ஏற்படவேண்டு மென்பதற்காகவே இக் கலையாடலை மக்கள் கண்ணகி வழிபாட்டுடன் இணைந்து இவ்விழாவைச் செய்வர். கொம்பு விளையாட்டின் சிறப்பம்சமாகப் போர்த்தேங்காய் உடைத்தல், கொம்பு முறித்தல், கொம்பு தட்டு எடுத்தல், தேர்க்கல்யாணம், குளிர்த்தி பாடுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

திருக்கோணமலை மாவட்டத்திலும் அம்மன் வழிபாடு பிரபல்யம் வாய்ந்து காணப்படுகின்றது. அம்மன் வேள்விகள் வைகாசி மாதத்தில் இடம் பெறுகின்றன. இக்காலத்தில் அதிக வெப்பம் இருப்பதால், மக்களுக்கு அம்மை நோய் ஏற்படுவது வழக்கம். இதனை ஆற்றப்படுத்தும் பொருட்டு வேண்டப்படும் வழி பாடுகளாகவே பெரிதும் காணப்படுகின்றது. இதன் போது, பரிகலம் அடைத்தல், கன்னிக்கால் நடுதல், பந்தல் அமைத்தல், மடைப்பெட்டி எடுத்தல், பொங்கல் வைத்தல், உரு ஆடுதல், சாட்டை அடித்தல், பறை மேளம் அடித்தல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுச் சொல்லுதல், குளித்தி பாடுதல் போன்ற விடயங்கள் இடம் பெறுகின்றன.

இத்தகைய வேள்விகள் ஒவ்வொரு ஆலயத்திலும் குறிப்பிட்ட தினத்தில் அக்கிராமமக்கள் சூழுவிமரிசையாக நடைபெறும்.

மூதூர், தம்பலகாமம், திரியாய், மல்லிகைத்தீவு பள்ளிக் குடியிருப்பு, ஈச்சிலம்பற்று போன்ற பிரதேசங்களில் விவசாயத் தொழிலை நோக்கமாகக் கொண்டு செய்யப்படும் வேள்விகளும் உண்டு. கால்நடைகள் வளர்த்தல் அதனை வளமாக்குவதற்கும், பாதுகாப் பதற்கும் இறைவனை வேண்டிச் செய்வதாகவே வதனமார் சடங்கு அல்லது நாயன்மார் வேள்விகள் இடம் பெறுகின்றன.

தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகைகளும், ஆலய விழாக்கள் போன்ற நிகழ்வுகளும் சமய, கலை, கலாசார பண்பாட்டுக் கோலங்களை வளர்க்கின்றன.

தைமாதப்பிறப்பன்று சூரியனுக்குப் பொங்கல் படைத்து வழிபடும் விழா பொங்கல் விழா என்பர். விவசாய நிலங்களில் புதுப்பயிர் அறுவடையானதும் சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் முகமாக தமிழர்கள் பொங்கல் படைத்துச் சூரியனை வழிபடுகின்றனர். தைப்பொங்கல் தினத்திற்கு அடுத்த நாள் மாட்டு பொங்கல் நடைபெறும் சித்திரை வருடப் பிறப்பன்று மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து, புதுஆடை தரித்து, ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு, அறுசுவை உணவருந்தி உற்றார் உறவினர்க ளோடு உறவாகி நல்லன செய்தல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளன.

ஈச்சிலம்பற்று, சேனையூர், கட்டைபறிச்சான் பள்ளிக்குடியிப்பு, மல்லிகைத்தீவு ஆகிய இடங்களிலும் சிறு தெய்வ வழிபாடுகள் நீண்ட காலமாக இங்கு வாழும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள தோடு காவியம், அகவல், தோத்திரம் போன்ற இசைப்பாடல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறை உடுக்கு அம்மானைக்காய் சிலம்பு போன்ற இசைக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மூதூர் பிரதேசங்களில் உள்ள நல்லூர், வீரமாநகர் பட்டாளிபுரம் இலங்கைத் துறை, வாழைத்தோட்டம் போன்ற இடங்களில் பேய் பிசாசு வழிபாடு, காடேறி கடலை காளி, கடலைவைரவர் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வழிபாட்டில் கழிப்புக் கழித்தல், நூல் கட்டுதல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல், குழையடித்தல், திரு நீறு போடுதல், அச்சிரம் கட்டுதல், பேய் விலக்குதல் என்பனவும் இடம் பெருவதைக் காணலாம்.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பல கிராமங்கள் கோணேசர் ஆலயத்துடன், புராதன வரலாற்றைக் கொண்டதாக அமைந்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் ஆணைத்தீவிலிருந்து பசு நெய்யும், மூதூர் பிரதேச மல்லிகைத் தீவிலிருந்து மல்லிகைப்பூவும், கட்டைப்பறிச்சான் சந்தண வெட்டையிலிருந்து சந்தணக் கட்டைகளும் மேன்கமத்திலிருந்து அரிசியும், திரியாய் பிரதேசத்திலிருந்து தாமரை திரிகளும் அப்பகுதி மக்கள் சீர் வரிசையாக பூசை, விழாக்களுக்கு அனுப்பி வைக்கும் முறைமை பாரம்பரிய பண்பாடுகளுடன் காணப்படுகின்றது.

இதே போல் பல கிராமங்களின் பெயர்கள் அப்பிரதேச பாரம்பரியமாக அமைந்துள்ளது. சம்பூர் சம்பூரணம் என்னும் புலவர். கோணேசர் மாதுமையாளை நோக்கி இசை திருமுறைப்பாக்கள் பாடியதாகவும் வரலாறு கூறுகின்றது. சந்தண வெட்டை என்னுமிடத்திலிருந்து வெட்டப்பட்ட சந்தணக் கட்டைகளை, கட்டை பறிச்சான் துறையில் ஏற்றிபிறக்கியமையால் கட்டைபறிச்சான் எனவும் பெயர் பெற்றுள்ளன.கங்கை + வேலி கங்கைக்கு ஒருபக்க வேலியாக அமைந்த இடம் கங்கை வேலி இது திரிபுபெற்று கங்கு வேலியாகியது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர். ஈ + சிலம்பு + பற்று ஈச்சிலம்பற்று இரண்டு சிலம்புகளால் ஆர்ப்பரித்தாடிய அம்மன் அங்கு செம்பகநாச்சியம்மன் பேரில் குடி கொண்டுள்ளார். அதனால் ஈச்சிலம்பற்று என பெயர் வந்தன.

இலங்கைக்கு முதல் துறைமுகம் இலங்கைத்துறை என்பர் அதனால் இலங்கைத்துறை என்பர். அதனால் இலங்கைத்துறை என பெரியோர்கள் கூறுகின்றார்கள். வெருகல் கங்கையும் கடல் முகத்துவாரம் இணைந்துள்ள பிரதேசம் வெருகல் முகத்துவாரமும் சிறப்பாக, அமைந்துள்ளது. கண் + தழை கண்தழை. , கந்தளாயாக மருவியது. இதற்கு கோணேசர் கல்வெட்டுடன் சார்பான வரலாறு உண்டு இப்பகுதியில் சோழீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. கல்வெட்டுக்களும் புராதன சின்னங்களும் பார்க்கக் காணலாம்.

இதே போல் பல கிராமங்களின் பெயர்கள் புராண வரலாறுகளுடன் காணப்படுவதை காணமுடிகின்றது.

திருக்கோணமலை மாவட்டம் பல பற்றுக்களைக். கொண்டு அக்கால மன்னர் ஆட்சி செய்துள்ளமையை காணக்கூடியதாக இருக்கின்றது. அதற்கு உதாரணமாக திருமலை மாவட்டத்தில், கொட்டி புரப்பற்று, ஈச்சிலம்பற்று, தம்பலகாமம்பற்று, கட்டுக குளப்பற்று என பல வன்னிமைப் பிரிவுகள் மாவட்டத்தின் சிறப்பு. ஆட்சி அரசிறமை, ஆலயங்கள், நீர்பாசனங்கள் - குளங்கள், மலைக்குன்றுகள் - ஆறுகள் - புராதனச் சின்னங்கள், சிற்பக்கலை, ஓவியக்கலை அனைத்தும் கொண்டதாகவுள்ளது.

திருக்கோணமலை மாவட்டத்தில் அமைந்த மூதூர் பிரதேசத்தில் பல புராதன இடங்கள் வெருகலம்பதியில் வெருகல் புண்ணிய கங்கைத்தீர்த்தமும், கங்குவேலிக்கு அருகாமையிலுள்ள திருமங்கலாய், அகத்தியர்ஸ்தாபமும் காணப்படுகின்றன. மாவட்ட பிரதேசத்திலுள்ள சக்தி ஆலயங்களுள் திருமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள், சம்பூர் பத்திரகாளியம்பாள், ஈச்சிலம்பற்று செம்பக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாச்சியம்பாள், நீலாப்பளை பத்தினியம்மன், பன்குளம் எல்லைக் காளியம்மன் மிக சக்தி வாய்ந்த ஆலயமாக அமைந்துள்ளன. கங்குவேலி சிவன் ஆலயம் புராதன வரலாற்றினைக் கொண்டது.

திருக்கோணமலை பட்டினத்திலிருந்து ஆறு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது கன்னியா நீருற்று இது உலக பிரசித்தி பெற்ற இடமாகும். இராவணன் தனது தாயாரக்கு ஈமக்கடன் செய்வதற்காக இவ்வென்னீருற்றுக்களை (7-கிணறு) உண்டாக்கியதாக வரலாறு கூறுகின்றது.

திருக்கோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் காவல் தெய்வங்கள் காவல் காத்து வருகின்றன. ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் விசேடமாக வைரவர், காத்தவராயன், வீரபத்திரர் ஆலங்கள் இதற்கு சான்று பகிர்கின்றன. பன்குளப் பகுதிகளில் எல்லைக்காளி, சுடலை வைரவன் ஆகியனவும், மூதூர் பிரதேசத்தில் வன்னித் தெய்வம், வராகியம்மன் போன்ற தெய்வங்களும் குல தெய்வ வழிபாடாக இருந்து வருகின்றது.

மூதூர் பிரதேசத்தில் நிலவும் வழிபாட்டுமுறைகளுள், முறைசார், முறைசாரா வழிபாடு போன்ற பல்வேறுபட்ட முறைகளோடு, பக்திமுறை, பேய், பிசாசு வழிபாடு அம்சங்கள் நிலவுகின்ற போதிலும் பரந்தளவிலான வகையில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதி மக்கள் பாரம்பரியமாகவே கலை கலாசாரங்களோடு தொடர்புடை யதாகவும் விழாக்களாகவும், வேள்விகளாகவும், விரதங்களாகவும், நேர்த்திகளாகவும், சடங்குகளாகவும், மடைகளாகவும் பூசைகளாகவும், பொங்கல்களாகவும் தங்களுடைய நோக்கங்களைக் கொண்டு நடை பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகங்காரம் (உருவகக்கதை)

நல்லையா சித்திரவேல்

அடக்கமாக, அமைதியாக இருந்த அந்தக் கிணற்றைப் பார்த்து நீர்க்குளாய் எக்காளமிட்டுச் சிரித்தது.

"என்ன சிரிக்கிறாய்................?"

கிணற்றின் கேள்வியை நீர்க்குளாய் சட்டை செய்யவில்லை. அது தொடர்ந்தும் சிரித்துக் கொண்டேயிருந்தது. குளாயிலிருந்து நீர், தொட்டியை நிரப்பிக் கொண்டிருக்க, சிறுவர்கள் அதை அள்ளி அளைந்து ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்தனர்.

"இல்லை, இப்போது உன் பரிதாப நிலையை நினைக்க எனக்குச் சிரிப்பாக வருகிறது. என்னை விட்டால் இங்கு யார் இருக்கிறார்கள் என்ற திமிரில் இதுவரை தனிக்காட்டு ராஜாவாக பெருமைப்பட்டுக் கொண்டிருந்தாயல்லவா............? நான் வந்த பின் உன்னை யாராவது எட்டிக் கூடப்பார்க்கிறார்களா.........? ஒரு சொட்டு நீருக்குக் கூட என்னிடம் தான் ஓடி வருகிறார்கள். இந்தப் பெருமையை எப்படி நான் அடக்கி வைக்க முடியும்."

நீரால் நிரம்பி விட்டிருந்த அந்தக்கிணறு, குளாயின் பதிலைச் செவிமடுக்கவில்லை. அதுமீண்டும் மௌனமாகிவிட்டது.

ஆனால், புதிய நீர்க்குளாய் தொடர்ந்தும் அதைச்சீண்டிக் கொண்டேயிருந்தது.

"இந்த வீட்டின் தேவைகளுக்கு நான் எவ்வளவு வசதியாக இருக்கிறேனென்று உனக்குத் தெரியுமா? வீட்டின் உள்ளேயும் வெளியேயும், ஏன் மூலை முடுக்கெல்லாம் எனது சேவை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஒரே இடத்தில் தூங்கிக் கொண்டு சோம்பேறியாக இருக்கின்ற உனக்கெங்கே தெரியப்போகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவெல்லாம்? பழம் பெருமை பேசித்திரிகின்ற இந்தவீட்டுப் பெரியவர் கூட இப்போது எனது காலடியில் தான்" கூறிவிட்டு மீண்டும் சிரிக்கத் தொடங்கியது நீர்க்குளாய்.

இதே வேளை, வீதியால் சென்று கொண்டிருந்த வாகனமொன்றிலிருந்து ஒலிபெருக்கி அறிவித்தல் காதில் அலைமோதியது.

''பொதுமக்களுக்கோர் அறிவித்தல் நேற்றைய எமது முன்னறிவித்தலின்படி இன்று காலையிலிருந்து தொடர்ந்து இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்கு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டிருக்கும். குளத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் ஒரு நாளைக்கு மூன்று மணித்தியாலங்கள் மட்டுமே நீர் விநியோகம் நடைபெறும். நீரைச் சிக்கனமாகப் பாவிக்குமாறு பாவனையாளர்களைத் தயவாகக் கேட்டுக்கொள்கிறோம். நன்றி."

அந்த அறிவித்தல் முடியுமுன்னரே இதுவரை கலகலத்து ஓடிக்கொண்டிருந்த நீரின் ஓட்டம் சொல்லிவைத்தாற்போல திடீரென நின்றது. நீர்க் குளாயின் பக்கமிருந்து எதுவித சத்தத்தையும் காணவில்லை. வாயடைத்து மௌனமாகிவிட்ட குளாயிலிருந்து இப்போது நீர் சொட்டுச் சொட்டாகவே தான் விழுந்து கொண்டிருந்தது. கிணற்றிற்கு அதைப்பார்க்க, குளாய் கண்ணீர் விடுவது போலிருந்தது.

''என்ன............ அழுகிறாற்போல் தெரிகிறது? நன்றாக அழு. மேலே பாய்ந்தால், கீழேதான் விழவேண்டும்"

நீர்க் குளாயின் மௌனம் கலையவேயில்லை. விழுந்து கொண்டிருந்த நீர்த்துளிகளும் நின்று விட, வெறும் காற்றுமட்டுமே அந்த நீர்க்குளாயிலிருந்து அதன் பெருமூச்சாக வெளியேறிக் கொண்டிருந்தது. அதனருகில் யாருமில்லை.

ஆனால் கிணறு................. இப்போதும் கூடச் சிரிக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சாகித்திய விழாவில் 1ம் இடம் பெற்ற கட்டுரை (கனிஷ்டபிரிவு)

சுகன்யா மணிவண்ணன்

தேசியத்தையும் மதத்தையும் பாதுகாத்துக் கொள்ளுதல் பற்றி சிந்திக்க முன் தேசியம் என்றால் என்ன? மதம் என்றால் என்ன? அது ஏன் பாதுகாக்கப் பட வேண்டும் என்ற கேள்விகள் உங்கள் மனதில் எழுவது என் காதுகளுக்கு கேட்கின்றது.

ஒவ்வொரு நாட்டில் பிறந்த குடிமகனுக்கும் நாட்டு உரிமை உண்டு அவ் உரிமைகள் எவை என தெரிந்து கொண்டாலே அவன் அவ்உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நமது நாட்டில் பிறந்த குடிமகன் நற்பிரஜையாக வரும் வரை கல்வி கற்கும் உரிமை உண்டு. இதற்காக இலவசக் கல்வி அரசால் கொடுக்கப்படுகிறது.

அரசால் வழங்கப்படும் இலவச வைத்திய வசதிகளையும் ஒவ்வொரு பிரஜையும் பெற்றுக் கொள்ள உரிமை உண்டு.

வீதி சாலைகளை பயன்படுத்தவும், பொது இடங்களில் உள்ள வசதிகளை அனுபவிக்கவும் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை உண்டு ஆனால் அவ்வசதிகளை அனுபவிக்கும் போதும் சில சில விதிமுறைகளுக்கு அமைய நடக்க வேண்டும். ஒருவருக்கு தனது உரிமையைப் பெற்றுக் கொள்ளும் போது அது இன்னொருவருக்கு உரிமையை மறுப்பதாக இருக்கக் கூடாது.

ஒவ்வொரு இனத்தவருக்கும் சிறப்பான பண்பாடுகளும் கலாசாரங்களும் உண்டு அக் கலாசாரத்தையும் பண்பாட்டையும் பேணிக் காக்க அவர்களுக்கு உரிமை உண்டு.

நாட்டில் ஏற்பட்டுள்ள சட்டங்களும் விதி முறைகளும் தேசியத்தை காப்பதற்காகவே அமைக்கப்பட்டுள்ளது. தேசியத்துடன் மதத்தையும் நாம் முக்கியம் கொடுத்து மதிப்பளித்து வாழ்கிறோம்.

ஒவ்வொரு குடிமகனுக்கும் தனது மதத்தை பின் பற்றி வாழ உரிமை உண்டு சுய விருப்பத்தால் மதம் மாற விரும்பினால் அதற்கும் உரிமை உண்டு எவரையும் மதம் மாற்ற நிர்ப்பந்திக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மதத்தையும் சமமாக மதித்து அரசாங்கம் உதவிகளை வழங்க வேண்டும். ஒவ்வொரு குடிமகனுக்கும் தனது தேசியத்தையும் மதத்தையும் அனுபவிக்கவும் பின் பற்றவும் உரிமை உண்டு அதுபோல அதைக் காப்பற்றவும் வேண்டும்.

இது பேணப்பட்டும் காப்பற்றப் பட்டும் வருவதால் தான் எமது வருங்கால சந்ததியும் சகல உரிமைகளுடன் வாழ முடியும்.

எமது நாட்டு பிரஜைக்கு எமது அரசாங்கம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது போல் ஏனைய நாடுகளிலும் அவ்வவ் அரசு தமது மக்களுக்கு சகல வசதிகளையும் வழங்குகிறது.

நமது தேசியத்தையும் மதத்தையும்' காப்பதற்காக நமக்கு உள்ள குடியுரிமையைக் கொண்டு எமக்கு வாக்குரிமை உள்ளது. நாம் தேர்தலின் போது எமது வாக்குகளை சரியாகப் பயன்படுத்தும் உரிமை உண்டு. இதன் மூலம் நல்ல அரசை நாம் அமைத்து நமது தேசியத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும் நமது மதத்தை வளர்த்துக் கொள்ள முடியும்.

மதம் சிறப்பாக வளர்ந்தால் மதப் பற்று தானாகவே ஏற்படும் மதப் பற்று ஏற்படும் போது நல்ல பண்புகள் மேல் ஓங்கும் தீய குணங்கள் அற்றுப் போகும் இதனால் வளமானதும், சுபீட்சமானதுமான அழகான நாட்டை நாம் அடைய முடியும்

நமது வளங்களை பயன் படுத்தும் உரிமை நமக்கு இருப்பதால் நாம் நமது வளங்களைப் பயன்படுத்தி நாட்டை உள்ள நிலைக்கு கொண்டு வர முடியும்.

பெரியார்களும், பெற்றார்களும், ஆசிரியர்களும் கூறும் நல்லுரைகளைக் கேட்டு நமது நாட்டின் தேசியத்தையும் இறைமையையும் பாதுகாத்து வளமான நாட்டில் வளமுடன் வாழ்ந்து நலன் பெறுவோமாக.

தேசிய மயமாக்கல் என்பது அனேகமான விடயங்களில் அமுல் படுத்தப்படுகிறது. இதனை மக்களும் அரசும் விரும்புகின்றனர் அதன் மூலமும் தேசியம் பாதுகாக்கப்படுகிறது.

தனியார் மயமான கம்பனிகள் கூட தேசிய மயமாக்கப்பட்ட வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களைக் கவர்கின்றன.

தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்திடுவோம் என்று பாரதி பாடினான். ஒவ்வொரு மனிதனும் முயற்சி செய்ய வேண்டும் ஆனால் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் இதுவே தேசியக் கொள்கை

ஒவ்வொரு இனத்தவருக்கும் தேசிய உடை, தேசிய கலாசாரம் என்பன உண்டு தமிழராகிய நாம் எமது தேசிய உடை அணிபவர்களை காண்பது மிக அரிதாக உள்ளது. இவ்வாறான வகையில் எமது தேசியம் எப்படிக் காக்கப்படும். சிறப்பு வைபவங்களில் கூட தேசிய உடை அணிபவர்களை காண்பது அரிதிலும் அரிதாக உள்ளது. இது வேதனைக்குரிய விடயம். ஆகவே நாம் நமது தேசிய உடையை அணிய வெட்கப்படக்கூடாது. மாறாகப் பெருமை கொள்ள வேண்டும் தேசிய உடையில் காண்பவருக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்க வேண்டும்.

எமது தேசியப் பறவை, எது தேசியப் பூ எது என்பது பலருக்கு தெியவில்லை ஆயின் எப்படி தேசியப் பொருட்கள் பாதுகாக்கப்படும்.

பொது வைபவங்கள் சிறப்பு வைபவங்கள் ஆரம்பிக்கும் போது தேசியக் கொடி ஏற்றுதல் வேண்டும். ஆனால். சுதந்திரத்தினத்தன்றும், அல்லது அமைச்சர் கலந்து கொள்ளும் போதும் மாத்திரம் தேசியக் கொடியைக் காணக்கூடியதாக உள்ளது. இந் நிலை மாறி எந்த ஒரு வைபவமாயினும் தேசியக் கொடியை பயபக்தியோடு எற்றி நமது நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கும் வழக்கத்தில் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் தேசிய கீதம் பாடுதல் வேண்டும். தேசிய கீதம் பாடத் தெரிந்த குடிமகன் எத்தனை பேர்எனக் கணக் கொடுத்தால் எப்படியும் தொண்ணூறு வீதத்திற்கும் மேல் தேசிய கீதம் பாடத் தெரியாதவராகக் காணப்படுவர் இந்நிலை மாறி எல்லாப் பிரஜையும் தேசிய கீதம் தெரிந்தவராகக் காணப்படுதல் வேண்டும்.

மேற்கூறிய வாறு ஒவ்வொரு குடிமகனும் நடந்து கொண்டால் நாட்டின் தேசியத்தையும் மதத்தையும் பாதுகாக்கமுடியும் இவ்வாறு நல்ல நாடாக மாற்றுதல் நமது ஒவ்வொருவர் கையிலுமே தங்கி உள்ளது.

*உள்ளத்திலே உண்மை ஒளி உண்டாயின்*
*வாக்கினிலே ஒளி உண்டாம்* - *பாரதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල - 2005
## ගද්‍ය රචනා - (කනිෂ්ඨ)
## ප්‍රථම ස්ථානය - මෙත් අනුපම බෝගහවත්ත.

# රට දැය සමය රැක ගනිමු.

මානව වර්ගයා සාමූහිකව එකම ධජයක් සෙවනේ තම පැවැත් සරි කරගන්නා බිම් කඩ රටක් ලෙසද, එකී රටේ වාසය කරන්නාවූ සමස්ත මානව සම්පත ජාතිය ලෙසද, එකී ජනයාගේ පැවැත්ම සුයහපත් කිරීමට පිටිවහලක් වන හර පද්ධතීන් රැගත් ඇදහිලි සමූහය සමය හෙවත් ආගම ලෙසද අර්ථ දැක්විය හැක. රටක් වශයෙන් සාමූහිකව නැගී සිටීමේ චින්තනය බිහිවූයේ මානව පරිණාමයේ මූලාරම්භයේ සිටය.

බහු ජාතීන් වාසය කළද ඒ සියලු දෙනා තුල රට පිළිබඳව පොදු ආකල්පයන් වර්ධනය කර ගැනීම රටේ ඉදිරි ගමනට මහෝපකාරී වේ. මිනිසා තම පැවැත්ම තහවුරු කර ගැනීමේදී සපුරා ගත යුතු මූලික දෑ බොහෝය. මෙම අවශ්‍යතා සපුරා ගැනීමසඳහා රටේ ස්වභාවික සම්පත් භාවිතා කිරීමේදී රට රැක ගැනීමේ අධිෂ්ඨානයෙන් කිරීම අප සතු පරම යුතුකමකි. අප වැනි ළමුන් තුල එවැනි උදාර හැඟීම් ඇතිකරලීම සඳහා අපේ අතීත මුතුන් මිත්තන් පරමාදර්ශී චරිතයන් ලෙස හඳුන්වා දිය හැක. අනුරාධපුර පොළොන්නරු රාජධානීන් නිර්මාණය කරමින් රට වැසියන්ගේ දිවිය සුඛිත මුදිත කළ දුටුගැමුණු ,මහා පැරකුම් ,මහා විජය බාහු ,වැනි රජ දරුවන් කළ මෙහෙය වත්මනේදීත් ලක් මැණියන්ට ආශිර්වාදයකි. තවද විදේශිකයින් ලක්දිව තම ග්‍රහණයට නතුකර ගැනීමට උත්සහ කරද්දී අභීතව තම දේශය රැක ගැනීමට පෙරට ආ වීර කැප්පෙටිපොළ අදිකාරම්, ගොංගාලේ ගොඩබණ්ඩා. පුරන් අප්පු, වැනි උදාර විරුවන් ගිය මග අප වැනි කුඩා දරුවන් යා යුතුව ඇත.

එසේම සිංහලයන් වන අපි අභිමානවත් ජාතියක් වන්නෙමු සිංහලද්වීපයේ ජන්මලාභය ලබා උතුම් වූ හෙළයින් ලෙස ජීවත් වන්නට අපලද අයිතිය අතීතයෙන් උරුමවූවකි.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ජාතියක් ලෙස දෙපයින් නැගී සිටීමට පූර්වාදර්ශයන් වූ අනගාරික ධර්මපාලතුමන්, 'ටිබෙට් ජාතික එස්. මහින්ද හිමියන් ,සාහිත්‍ය ශූරී කුමාරතුංග මුනිදාස, වැනි විද්වතුන් අදද අප හදවත් තුල ජීවමානය. ඒ ඔවුන් රට දැය සමය වෙනුවෙන් කළ සේවය නිසා වෙනි. එසේම මිනිස් දිවියේ මුදුන් මල්කඩ ලෙස සැලකෙන ආගම තුල මිනිසුන් රඳවා ගෙන සිටිමින් මහත් සේවයක් ඉටුකළ හික්කඩුවේ ශ්‍රී සුමංගල හිමි, මිගෙට්ටුවත්තේ ගුණානන්ද හිමි, කුඩා පොල හිමි, වැනි පැවිදි පඬිරුවන්ගේ මාර්ගයේ අප යායුතු කාලය එළඹ ඇත.

මුදල් පසුපස මිනිසා හඹා යන මෙවන් යුගයක රට දැය සමය පිළිබඳ හැඟීම් මිනිස් සිත් තුළින් තුරන් වීම අරුමයක් නොවේ. පුද්ගලයෙකුගේ අනන්‍යතාවය රැක දෙන්නාවූ රට දැය සමය යන සංකල්පය තම ජීවිතය සේ සුරැකිය යුතුබව කුඩා දරුවන් වන අප හොඳින් අවධාරණය කරගත යුතුය. උපන්නාට මෙලොව ජීවත් වනවාට වඩා රටට ජාතියට ආගමට තමාගෙන් ඉටුවිය යුතු යුතුකම් නොපිරිහෙලා ඉටු කිරීම සඳහා අප බැඳී සිටින බව නිරතුරුව සිහි තබා ගත යුතුය.මුදලින් කල නොහැකි බොහෝ දේ රටක් ජාතියක් ලෙස සාමූහික වීමෙන් කළ හැකි බව අපි දනිමු. මෙවැනි උදාර සංකල්ප සිත්හි රෝපණය කිරීම අධ්‍යාපන ක්‍රියාවලියෙන්ද ඉටුවිය යුතුය. සාමය සමගිය පරාර්ථකාමී බව වැනි යහ ගුණද මෙහිලා වැදගත් වේ.

නුදුරු අනාගතයේ ලෝකය නිර්මාණය කිරීමට පිය ඔසවන දරුවන් වන අපි රට දැය සමය යන උදාර සංකල්පය අපගේ ප්‍රාණ වායුව සේ සලකමින් එය රැකගැනී මට තම දිවි පරදුවට තබා වුව පෙරමුණ ගත යුතු බව තරයේ සිහි තබා ගනිමු.

**මෙත් අනුපම බෝගහවත්ත**

**7 - B**

| |
|---|
| *தன்னைத்தான் உயர்த்திக் கொள்பவன் தாழ்த்தப்படுவான் - பைபிள்* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சாகித்திய விழாவில் 1ம் இடம் பெற்ற கட்டுரை (சிரேஸ்ட பிரிவு)

P. சரண்யா 10C

# ஒற்றுமையாக செயல்படுவதற்கு இயற்கை தந்த செய்தி

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சங்கப்புலவன் கனியன் பூங்குன்றனார் உரைத்த சமத்துவக் கருத்து உலகமயமாக்கல் அழிந்து போக, சமத்துவத்திற்க்கும் ஒற்றுமைக்கும் சவக்குழி தோண்டி மரணம் என்ற நிஜத்திற்கு எதிராய் மனிதனோடு மனிதன் முரண்பட்டு போரிட்டு நலிந்தோரை வலியோர் நசுக்க, வல்லரசுகள் ஆயுதங்களைக்குவிக்க நான் பெரிசு நீ பெரிது என நித்தமும் இரத்தக்களரியில் பூமி மிதக்க, மறுபறம் விஞ்ஞானம் வளர்ச்சியில் செவ்வாய்க்கிரத்திலும் கால்பதிக்க, அறிவியல் வளர்ச்சியில் சிந்தனை வளர்ச்சியில் மனிதன் அண்டங்களையும் கடந்து விட்டான் என இறுமாந்திருக்க, எதுவும் இங்கே உயர்வில்லை எதுவும் இங்கே இழிவில்லை" இயற்கையை விலக்க எவராலும் முடியாது என்ற உயர்ந்த இயற்கைத்தத்துவத்தை ஆழிப்பேரலை அனர்த்தம் உணர்த்திச் சென்றுள்ளது எனில் மிகையாகாது.

முப்பது ஆண்டுகளாக போர் இறைத்த பூமியில் இடம் பெயர்ந்து இடம் பெயர்ந்து போராட்டமே வாழ்க்கையாகி வாழ்க்கையே போராட்டமாகி களைத்து நொந்த மக்கள், சமாதான காலத்தில் வாழ்க்கையை சற்று நிமிர்த்தும் வேளையில் வாழ்வு கொடுத்த கடல், சோறு போட்டகடல், அன்னையாய் அரவணைத்த அந்த அழகிய கடலே அரக்கனாய் எழுந்து ஆழிப்பேரலையாய் கோரத்தாண்டவமாடி குடியோடு சுற்றத்தோடு ஊரோடு ஆயிரமாயிர மாய் உயிர் குடித்து மனித அவலத்தின் சிதைவுக்குப் பின் குமுறல்களின் உச்ச வலியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தமாய்த்தந்து, உலகின் மிகப் பெரிய சோகத்தை ஏற்படுத்திய இந்த இயற்கை அனர்த்தம், இனம் பார்க்கவில்லை, ஜாதி பார்க்கவில்லை, உயர்ந்தவன் தாழ்ந்தவன் பார்க்கவில்லை, அனைத்தையும் ஒன்றாய் பாகுபாடின்றி சிதைத்து சின்னாபின்னப்படுத்தி இழுத்து அள்ளி வாரிச் சென்றது நிஜம்.

மனிதனுக்கு உயர்ந்த உண்மையை உணர்த்தி விட்டுச் சென்றிருக்கின்றது வாழும் காலத்தில் மனிதத்தை அது கிடைக்கும் அரிய சந்தர்ப்பத்தை ஒற்றுமையாக செயற்பட கற்றுக்கொள் என்னும் வாழ்க்கைத்தத்துவத்தை கடற்கோள் கற்றுத்தந்துள்ளது. இனவாதிகளின் உயிரையும் குடித்தது. ஆயுத பலம் கொண்ட இராணுவத்தையும் அள்ளிச் சென்றது வயிற்றுக்கும் வாயுக்கும் குருஷேத்திரம் நடத்தும் பாவப்பட்ட மக்களையும் வாரி அள்ளியது. பச்சிளம் பாலகர்களை, இளம் தளிர்களை, கர்ப்பிணிப் பெண்களை, முதுமைகளை, பூக்கள், பிஞ்சுகள், காய்கள், பழங்கள் இன்னும் எத்தனை எத்தனையோ எதையுமே விட்டுவைக்கவில்லை. இப்பிரபஞ்சத்தில் பெரிது எது? சிறிது எது? அறிவியல் சிந்தனை வளர்ச்சியின் அகராதியையே மாற்றி அமைத்த ஆழிப்பேரலை அனர்த்தம், எஞ்சியோர்க்கு எதை உணர்த்தும்.

பணம் படைத்தவனும் பல்லக்கு கட்டவில்லை உயர் ஜாதிக்காரனும் பறையடிக்கவில்லை சந்தனப் பெட்டியில் படுத்தவில்லை மதப் பெயர் கொண்டு சுன்னம் இடிக்கவில்லை தேவாரம், குறான், ஜெபம் ஓதவில்லை எல்லோரையும் ஒன்றாய் ஒரே குழியில் இட்டு மண்மூடிய சோகத்திலும் உறைய வைத்த உண்மை மண் மீது வாழும் போது இனத்தின் பேரால், ஜாதியின் பேரால், மதத்தின் பேரால் இனியும் யுத்தம் வேண்டாம் எல்லோரும் இந்நாட்டு மக்கள் எல்லோரும் எல்லாவற்றிலும் சமத்துவமாய் ஒற்றுமையாய் செயல்படுவதற்க்கு இயற்கை கற்றுத்தந்த பாடம் இது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலப் போராட்டத்தில் இழந்த மக்கள் தொகையை விட ஓர் கணப் பொழுதில் வந்ததும் வாரிப் போனதுமாய் ஆழிப்பேரலை ஆயிரமாயிரமாய் உயிர்களையும் உடமைகளையும் காவு கொண்ட வரலாறு இந்த அகிலத்திற்கு அறை கூவிச் சென்ற செய்தி இனியும் ஒற்றுமையாய் மனித இனம் செயல்பட வில்லையென்றால் அவர்களை மனித அகராதியில் சேர்க்கப்பட முடியாது என்ற உண்மையை உணர்த்திச் சென்றுள்ளது போதும் யுகம் யுகமாய் சிந்திய இரத்தம் வானத்தில் காலம் காலமாய் யுத்த விமானங்கள் பறந்த காலம். போகட்டும். இந்த இயற்கை அனர்த்தத்தின் பின்னாவது சமாதானப் புறாக்கள் வானத்தில் நிரந்திரமாய்ப் பறக்கட்டும்.

அனைவரும் ஒற்றுமையாய் செயல்படுத்துவதற்கு வழிபிறக்கட்டும் பிறந்துவிட்டது வழி. இவ்வழியிலாவது வாழ்க்கையில் ஏற்பட்டவற்றை மறந்து புதுத்தெம்புடன் மீண்டும் ஒரு வாழ்க்கையை புதிதாய்க் கட்டியெழுப்பி இனிவரும் காலத்திலாவது ஒற்றுமையாய் செயல்படுவோம்.

*நீ பகலில் ஆற்றிய செயல்கள் பற்றி இரவில் உன்னையே நீ கேள்விக் கணக்குக் கேட்கும் வரையில் உன்னுடைய இமைகள் கண்களை மூட அனுமதிக்காதே*

*- பீத்தகாரஸ் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල - 2005**

**ගද්‍ය රචනා - (ජ්‍යෙෂ්ඨ)**

**ප්‍රථම ස්ථානය - එස්. පී. රුචිනි සඳමාලි**

# සාමූහිකව ක්‍රියා කිරීමට සොබාදහම දුන් පණිවිඩය විපතයි.

නිසල ජලය ඇති ස්ථානයකට කුඩා ගල් කැබැල්ලක් විසි කල විට ඇතිවන්නා වූ කැළඹිල්ල සේම හිමිදිරියේ හිරු නැගෙන වේලාවේ කොළ අතු අග සුරතල් වෙමින් දිලෙන පිණිබිඳු ක්ෂණයෙන් අතුරුදහන් වන්නා සේම කොත් කැරලි අතරින් පාවෙමින් ආකාසයේ ඇතින් ඇතටම පියාසර කරන දූහුල් වලාවන් සේම සාමය සාමූහිකත්වය එකමුතුව තමැති දියුණුවේ මාවතේ අති බිහිසුණුකාරී වූත් ප්‍රචණ්ඩකාරී වූත් අමානුෂික වූත් අසාධාරණ වූත් බාධකයන්ගෙන් පිරී පවතී. ඇතැම්හු දේශසීමා වෙන් කර ගත නොහැකිව කුලල් කා ගනිති. ඇණකොටා ගනිති. තවත් පිරිසක් ජන නායකයින් පත් කර ගැනීම සඳහා ගහ බැන ගනිති. සැබවින්ම මෙය වර්තමානයේ හටගෙන ඇති ප්‍රබල අර්බුදයක් බවට පත්වී හමාරය. සාමූහිකව ක්‍රියා කිරීමට යහපත් ගුණ ධර්ම අනුගමනය කිරීමට අප හට සොබා දහම විසින් කියා දුන් පාඩමක් ලෙස "සුනාමිය" හැඳින්විය හැකිය.

සුනාමියක් යනු රළ මාලාවකි. සුනාමි යන පදය පැන නගින්නේ ජපන් භාෂාවෙනි. මුහුද අභ්‍යන්තරයෙහි ජල තීරුවක් ලම්බකව වන කැළඹීමක් හේතුවෙන් මෙම රළ මාලාව ඇති වේ. භූමිකම්පා නාය යෑම් ගිණි කඳු විදාරණයන් හා පිපිරීම් ග්‍රහවස්තු ඇස්ටරොයිඩ ආදිය ඇද වැටීම නිසාද මෙම සුනාමි තත්වය ඇති විය හැක. අපගේ අවශ්‍යතා ඉටු කර ගැනීමේදී තරඟයේදී සංවර්ධනයේදී පොළෝමහී කාන්තාවටත් පරිසරයටත් අප අතින් හානි සිදුවේ. මේ හානිවල ප්‍රතිඵලය වන්නේ ස්වභාව ධර්මයා කෙදිනක හෝ අපට එරෙහි වීමයි. නමුත් ස්වභාව ධර්මයා සමඟ ගැටීමට අපට නොහැක. රටක් තවත් රටකට එරෙහිව යුද්ධ ප්‍රකාශ කලහොත් එම රට එරටට එරෙහිව යුද්ධ ප්‍රකාශ කර රටවල් දෙක යුද්ධ කරයි. නමුත් ස්වභාව ධර්මයා අපට එරෙහි වන විට ස්වභාව



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ධර්මයාට එරෙහිව යුද්ධ ප්‍රකාශ කිරීමට අපට පුළුවන්කමක් නැත. ස්වභාව ධර්මයා විනාශ කර අපි ලබා ගන්නා වූ ආර්ථික සමාජීය හෝ භෞතික දියුණුවට පැවැත්මක් නැති බව ස්වභාව ධර්මයා යළි යළිත් සනාථ කර තිබේ.

ස්වභාව ධර්මයා මිනිසුන් වශයෙන් අප කරන කියන ඉතාමත් සුළු හොඳ හෝ නරක දෙයක් පවා සාධාරණ විනිශ්චයකට ලක් කරයි. වෙනත් ආකාරයකට කිව හොත් ස්වභාව ධර්මයා පෘථිවියේ ජීවත්වන බුද්ධිමත්ම සත්ව කොට්ඨාශය වන අප කරන කියන ඉඳිකටු තුඩක් තරම් කුඩා හොඳ දෙයකට පවා හොඳ ප්‍රතිචාර දක්වයි. එමෙන්ම නරක දෙයකට නරක ප්‍රතිචාර දක්වයි.

එදවස විසූ කැළණිතිස්ස රජ තෙමේ බොහෝ ශ්‍රද්ධාවන්ත මෙන්ම ඒ තරමටම කිපෙන්නා වූද රජ කෙනෙක් විය. තල්පතක ලියැවුණා වූ ලිපිය නිසාවෙන් නොමඟ යැවුණු සිත් ඇති වුණාවූ කැළණිතිස්ස රජු තම ආචාර්ය භික්ෂූන් වහන්සේව උණුතෙල් කටාරමක දමා මරණයට පත් කරන්නට අණ කලේය. නොකලා වූ වරදකට එසේ දඬුවම් ලද රහතුන් වහන්සේගේ දේහය මුහුදට දැමීමටද කැළණිතිස්ස රජු කටයුතු කල බව ඉතිහාසයේ සඳහන් වේ. තම බිසවද මුහුදට දම්මවා මරවන ලදි. එකී නිරපරාදේ වූ දඬුවමෙන් කෝපයට පත් වුණු සමුද්‍රාධිගෘහිත දෙවිවරු මුහුද බියකරු කුණාටු ගෙනදී තරඟ රළ වෙරළ දෙසට ගසමින් රටට ගලන්නට විය. එම උවදුරෙන් ගැලවීම සඳහා දියණිය වූ විහාරමහා දේවිය සමුද්‍රවාසී දේවතාවුන්ට පූජා කොට ජල ගැලීම නවතා රටේ ඉතිරිය රැක ගත්හ. ඒ දවස කතාවකට පමණක් සීමාවූ අපට අසන්නට පමණක් තිබූ ඒ සිද්ධිදාමය එකෝමත් එක කාලෙක කතාවක් ලෙස බැහැර කරන්නට අපට සිත් නොදේ. සමුද්‍ර එය අපට ප්‍රායෝගික සත්‍යක් ලෙස අසන්නට පමණක් නොව පෙනෙන්නටද සලසා දුන්නේය.

2004 උඳුවප් සීතල තුරුළු කරගත් අපට 2005 ජනවාරිය පිළිගන්නට තිබුණේ දින කිහිපයක් පමණි. වෙනද මෙන් කිරිබත් පිසින්නට තාන් පිළි ඇඟලන්නට ආචාර සමාචාර කොට සුබ පතන්නට 31 ද නවත් පිරිසකට ඉඩ නොදුන්නේය. සුන් බුන් මළ මිනී අතරේ අඳෝනා පිරි ජනවාරියක් අපට උරුම විය. සයුර සුදෝ සුදු පෙණ කැටි දමා ගෙනවිත් අප පා දොවා හීන් සීරුවේ ආ මඟම ඇදෙනා රළ පෙළ එදා නැවතත්


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඇඳුනෝ දස දහස් ගණන් මිනිසුන්ගේ ජීවිත හා දේපළද රැගෙනය. සුනාමි නිසා වෙන් ඇඳිවත උන්හිටිතැන් සේම දිවි අහිමි වූවෝ මෙන්ම එකී නගර කැළඹීම මත්තෙන් බඩ වඩා ගන්නට සැරසෙන්නාවූ තිරශ්චීන පිරිසක්ද මේ මිහිමත සිටියහ.

එසේම අවතැන් වූ ජනතාවට දිරියක් වෙමින් ඔවුන්ගේ දුක තුනී කරලන්නට අවැසි ශක්තියක් වෙමින් ජාති ආගම් පාට පක්ෂ ලිංගභේද නොසලකා චණ්ඩ වූ සාගර තරංග එකී මෙකී සෑම කෙනෙකුම බිලි ගත්තේය. සිත් පිත් නැති ජල ධාරාවක් එසේ සියලු භේදයන් අමතක කොට දස දහස් ගණන් ජීවිත බිලි ගනිද්දී සිත් පිත් ඇති සියල්ලෝම එකී සියලු භේදයන් අමතක කොට එකාවන්ව පෙළගැසිය යුතුය. මේ බිම ගොඩ නැගීමේ අදිටන ලෙසට කා වද්දා ගත යුතුය.

නියඟ ගංවතුර ආදියෙන් පීඩා වූ අපට ඒ ස්වභාවදහමේ නවතම දඬුවමද ලබා දුන්නේය. සුභාෂිතයේ ඇති පරිදි

"වනත් නොයෙක් ගං හෝ ඇල කඳුරු පැන
මනත් ගැඹුර සිඳු නොයෙනෙවු වෙරළ පැන"

(නොයෙක් ගං ඇල දොල වල ජලය ගලා ආවත් මහත් ගැඹුරු සයුරු වෙරළ ඉක්මවා නොයයි.)

එහෙත් එකී භාෂිතයන්ගෙන්ද පිට පැන සයුර වෙරළ ඉක්මවීය. සිදු නොවුවායැයි සිතා සිටින්නට හැකි නම් එහෙත් සිදුවුණාවූ මහ විපත්තිය සිදුවී හමාරය. එය එසේ සිදුවන්නට ඇත්තේ මේ මිහිතලය මත මිනිසුන් කරන නින්දිත ක්‍රියා මහ සමුදුරට බලා සිටින්නට නොහැකිව විය හැක.

සුනාමි රැල්ල හේතුවෙන් අප රටට දැඩි විනාශයක් වූ බව සත්‍යකි. සුනාමියෙන් පසු ශ්‍රීලංකාවේ භෞමික අඛණ්ඩතාවයට හා ස්වෛරී භාවයට දැඩි ප්‍රහාරයක් යොමු කළ මුහුදු කොටි ශක්තිය සැළකිය යුතු ආකාරයට අවම වී ඇති අතර එම බල හීන වීම ඊළඟ වසර කීපයේදී නවත් ඊලාම් යුද්ධයක් පටන් ගැනීමේ ප්‍රවණතාවක් සැළකිය යුතු අන්දමට අවම කර ඇත. සුනාමියෙන් හෙම්බත් වූ රජයද කොටි සංවිධානයද වැඩි උද්යෝගයකින් සාම සාකච්ඡා අරඹා තිරසාර සාම පදනමකට එළඹීමට ඇති හැකියාව දැන් වැඩිවී ඇතැයි සිතිය හැක. එපමණක්ද නොව ලංකාවේ මෙම දුෂ්කර තත්වයට පළමු කොටම උදව් ලබා දීමට ඉදිරිපත් වුයේ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඉන්දියාවය.

ඒ රටේ ප්‍රශ්න තිබියදීත් ලංකාවට සෘජුවම ආධාර සම්පත් හා මිනිස් ශ්‍රම සහයෝගය ලබා දීමෙන් පෙන්වා දී ඇත්තේ ශ්‍රී ලංකා ඉන්දියා මිත්‍රත්වය ඉහළ මට්ටමකට ශක්තිමත් වී ඇති බවය. මෙය ඉදිරි අනාගතයේදී අප රට සමඟ ගනුදෙනු කරන ආර්ථික ප්‍රජාවේ අවධානයට ලක්වනු ඇත. ඉන්දියාව පමණක් නොව බොහෝ රටවල් ශ්‍රී ලංකාව සමඟ කිසිදු සබඳකමක් නොමැති රටවල් පවා සුනාමියෙන් පසු අප රටට ආධාර උපකාර කළහ. තවද සුනාමියෙන් පසු ලංකාව විදෙස් රටවල් සමඟ පැවැත්වූ සබඳතාද වැඩි දියුණු විය. ලංකාව තුල වෙලාගතිමින් තිබූ යුද්ධයටත් මදක් හෝ විරාමයක් සුනාමිය මඟින් ලැබුණි. සුනාමියට හසුවී දිවි ගලවා ගත් මිනිසුන්ගේ මනසට ශක්තියක් වීම ඔවුන් යළි ජීවිතය වෙත කැඳවා ගෙන ඒම පළමු කටයුත්තය. මාර්ග පිළිසකර කරවීමත් බිඳ වැටුණු ආර්ථිකය ගොඩ නැගීම සඳහා දේශපාලන භේදයෙන් තොර ඒකාබද්ධ වැඩ පිළිවෙලක් හඳුන්වා දීමත් කළ යුතුය. සංචාරක කර්මාන්තය නඟා සිටුවා ආර්ථිකය පෙර සේ යහපත් කර ගැනීමට වැඩ කටයුතු කළ යුතුය. ඒවාට අවශ්‍ය තරම් මුදල් හදල් අද වන විට අප රටට ලැබී හමාරය.

ශ්‍රී ලංකාව රටක් වශයෙන් ආගාධයෙනුත් ආගාධයට පත් වී තිබියදීත් ඒ ගැන අසංවේදීව කටයුතු කිරීමට අපේ දේශපාලඥයින්ට හා මහ ජනතාවට ආවේණික වූ ගති ලක්ෂණයකි. බල කාමයට තන්හාවට ආත්මාර්ථකාමීත්වයට සීමාවක් තිබිය යුතුය. සොබා දහම දුන් මේ විපත එය අපට මනාව කියා පායි. පොළෝමහී කාන්තාවට පරිසරයට අප මීට වඩා කාරුණික විය යුතුය. එහෙත් බුද්ධිමත් මිනිසුන් වන අප මහී කාන්තාවට අකාරුණික වී ඇත්තෙමු. එහි අවසාන ප්‍රතිඵලය ස්වභාව ධර්මයා නැවත නැවතත් අපටද අකාරුණික වීමයි. අනුකම්පා විරහිත වීමයි. එමනිසා ස්වභාව ධර්මයා අපට කියන්නේ මිනිසුනේ දැන්වත් හැදියල්ලා කියන එක නොවේද?

> செயலற்ற தன்மையை விட
> செயலாற்றுவது மிகச் சிறந்தது — கீதை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சாகித்திய விழாவில் 1ம் இடம் பெற்ற கவிதை

ஏ.ஜெ.எம்.சாலி

# நாங்கள் வீழ்ந்து விடவில்லை

ஆழிப் பேரலை
இது அழிந்து விடாத
ஒரு வரலாற்றுத் தடயம்
ஒப்பாரிப் பாடல்களின்
புதிய அத்தியாயம்.

அந்த
உயிர்ப்பலி நாளை
என் உள் மனம்
மறந்து போக வில்லை.
ஒரு கொடுமை
உச்சஸ்தாயியில்
முகாரி பாடியதை
எப்படி மறந்து போவேன்

வழமை போன்று தான்
அன்றைய பொழுதும்
எல்லோருக்கும் விடிந்தது.
ஆனால்.......பலருக்கு
அதுதான் இறுதிப் பொழுது
என்பதை, இறந்தும் கூட
அறியவில்லை அவர்கள்.

என்ன கடலே!
கவிஞர்களின் கற்பனையில்
காவியமாகிய உனக்குள்
அரக்க குணம்
புகுந்தது எப்படி?

பலருக்கு வாழ்வளித்து
பத்திரப்படுத்திய உன்னிடம்
கொடூரம் குடிகொண்டது
எங்ஙனம்?

அழகுக்குள் ஆபத்து உள்ளதாம்
அழகுக் கடலே.....உனக்குள்
பேராபத்து உள்ளதை
பேதைகள் நாங்கள்
உயிர் விடும் வரை
உணரவில்லையே!

தடவி விட்ட உன் அலைகரம்
தலைவிதியாய் மாறும் என்று
அறிந்திருக்கவில்லை
எங்கள்
அனாதை மனங்கள்.

பார்த்துக் கொண்டிருக்க
உறவுகளை
பறித்துக் கொண்டு போனாயே,
உன்னுள்
அசுரப் பசி ஒன்று
அடங்கிப் போயிருந்தது
தெரியவில்லை எங்களுக்கு
இத்தனை காலமும்

நினைவுக்கு எட்டிய
காலம் தொட்டு
நிகழ்ந்திடாத இடரையல்லவா
நிகழ்த்தி விட்டாய்
நீ இங்கு

மரணங்கள் கூட
மதிப்பிழந்து போனது
உன்
கோரக்கரங்களுக்குள் தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கையால் தந்து
மறு கையால்
தாக்கும் தந்திரம்
உனக்குள் உள்ளதை
உணர்ந்து கொண்டோம்
நாங்கள் இன்று

உன்னிடம் நாங்கள் பெற்றதை
எங்களிடம் முதலுடன் சேர்த்து
முழுதாய் பெற்று விட்டாய்
இன்று
எதுவுமே இல்லாத
அதுகள் ஆகிவிட்டோம்

விலைவாசி ஏற்றத்தால்
விறைத்துப் போன எங்களுக்கு
மலிவு விலையில்
மரணத்தைத் தந்து விட்டாய்

உன் சிறப்புக்களை பாடிய
மகா கவிகள்
உன் சீற்றத்தை
பாடவில்லை என்பதாலா
ஒப்பாரிப் பாடலுக்கு
ஒத்தாசை வழங்கி விட்டாய்

நிராயுத பாணிகள் மீது
தாக்குதல் கூடாது என்ற
நிரந்தர சட்டத்தையும்
உடைத்தது உன் உத்வேகம்

போருக்கு வரவில்லை நாங்கள்
வாழ்க்கைப் போருக்கு
வழிதேடி வந்தவர்கள்
மரணத்திற்கு உரிமை சாசனம்
எழுதி வைத்துத்தான்
மறுபடியும் மறுபடியும்
வருகிறோம் உன்னிடம்

உன்னுள்
முத்துக் குளிக்க மட்டும் தான்
தெரியும் என்று
முனங்கிடாதே - உன்
முக்காட்டுக்குள் மர்மம் தேடும்
முழு அறிவும் உள்ளது
எங்களிடம்
சுட்டுக் கொண்டோம் ஆனால்....
கற்றுக் கொண்டோம்

ஆனாலும் நாங்கள்
வீழ்ந்து விடவில்லை
மீளுவோம்

ஆர்ப்பரித்து நிற்கும் அலையே!
உனது முதுகில்
கப்பல் ஓட்டக்
கற்றுக் கொண்டவர்கள்
நாங்கள்

கற்பனைக்கெட்டாத
கடல் ஆழத்தை
கண்டுபிடித்தவர்களும் நாங்கள்
இன்னொரு கிரகத்தில்
வாழும் அறிவைத் தேடுபவர்கள்
நாங்கள்
உனது சூட்சுமத்தை அறியும்
சூத்திரம் என்ன தெரியாமலா
போய்விடும்?

ஆனாலும் நாங்கள்
வீழ்ந்து விடவில்லை
மீளுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල - 2005

## කවි

### පළමු ස්ථානය - එම්. ඊ. කේ. මධුවන්තිකා

## රෑදුරු දළ රළ

මහ මුහුද හිඳී ගොස්
නිමේෂයකින්
දිය රකුසු වෙසක් ගෙන
ජල කඳක් පෙරලාගෙන
ඇදී ආවා ගොඩබිමට
තවත් මොහොතකි

යාහොන් පිටියකි ගොඩබිමේ
අප අතර සිටි
මාපියන් හිතවතුන් සොයුරන්
වැතිර සිටියා මේ බිමේ
හඬා වැටුනා ලෝ අනා
නෙත් කළා මේ දෙරණ කඳුලින්

ලක් මවද හැඬුවා එදා
ඇගේ දරුවන් දෙස බලා
සයුර කළ මේ විපත සිතමින්
තවත් ඇඬුවා ලොව සැමා
කිමද සයුර ?
ඇයිද මේ තරම් රෑදුරු දළ රළ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சாகித்திய விழாவில்
1ம் இடம் பெற்ற சிறுகதை

திருமதி ஜெயவதனி மரியதாஸ்

# ஆழிப் பேரலைகள் அடங்கவில்லையே.......

" சுனாமி அகதி முகாம் " ஆரம்பமாகி அன்றோடு அறுபது நாட்கள் உருண்டோடி விட்டன. அறுபது நாட்களின் அல்லும் பகலையும் கடத்த ஆறு வருடங்கள் போலாகி விட்டன. தாயினும் தங்கையினதும் பிரிவில் தள்ளாடிய அவனுக்கு தான் இருப்பதை விட இல்லாமல் இருப்பதே மேல் என்ற மனநிலையுடனும் கடந்த கால நினைவலைகளுடனும் நிம்மதியின்றி நித்திரையின்றி அந்தப் பாடசாலையின் ஒரு மூலையில் விரக்தியடைந்த நிலையில் சோகமேயுருவாக உட்கார்ந்து இருப்பான். யாருடனும் பேசுவதில்லை. எங்கும் போவதில்லை. கொடுப்பதை உண்டு இருப்பதை உடுத்தி அன்னையின் அன்பையும் சகோதரியின் பாசத்தையும் எண்ணியபடி பழைய நினைவு டனேயே இருந்தான்.

"அந்த டிசம்பர் இருபத்தாறிலிருந்து நான் சாகாமல் செத்துக் கொண்டிருக்கிறேன் என்னைப் பெற்றெடுத்த என் தெய்வத்தையும், என் உடன் பிறந்தவளையும் பலி கொடுத்த நாள். அம்மா நீ என்னைப் படிக்க வைப்பதற்குப் பட்ட பாடுகள் எத்தனை! என் தெய்வமே உயிர் உள்ளவரை எப்படியம்மா உன்னை மறக்க முடியும். தங்கச்சியையும் உன்னோடு கூட்டிப் போனனீ, என்னை மட்டும் ஏனம்மா தனியாக விட்டுச் சென்று விட்டாய், உங்கள் இருவரது நினைவிலும் நான் உருமாறித் துடிக்க வேண்டுமென்றா? அன்றும் என்னை நேரத்தோடு எழுப்பி டீ தந்து, சாப்பாடு தந்து "கிளாச கட் பண்ணாத மகனே" என்று எத்தனையோ கற்பனைகளோடு என்னை அனுப்பி வைத்த என் தெய்வமே, உன் மனக்கோட்டையெல்லாம் மண் கோட்டையாக இடிந்து போய் விட்டது. தாயே என்னால் எப்படியம்மா டெஸ்ட் எழுத முடியும்? உங்கள் இருவரது நினைவிலும் சங்கமித்து உருக்குலைந்து கொண்டிருக்கும் என்னால் எதுவும் முடியவில்லை" என்று சரிந்து படுத்துக் கண்ணீர் விட்டு விம்மிக் கொண்டிருந்தான் அற்புதன் என்னும் அந்த அநாதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதி முகாமாக விளங்கிய அந்தப் பாடசாலை வாசலில் வாகனச்சத்தங்கள் கேட்டு, உள்ளுக்குள் இருந்தவர்கள், எல்லோரும் வெளியில் அடிபட்டு ஓடினார்கள். நித்திரையில் இருந்தவனை ''அண்ணா அண்ணா எழும்புங்க பள்ளிக்கூடப் பிள்ளை களுக்குத்தான் கொப்பி சாமான் குடுக்கப் போறாங்க. கொப்பி வேண்டினா அண்ணா நானும் சேர்ந்து நோட்ஸ் எழுதித் தருவன் டெஸ்ட் எடுக்கலாம் தானே'' என்று கூறிய அந்தத் தங்கையின் பாசத்தினையும் பொறுப்புணர்வையும், தமையனை உற்சாகப்படுத்தும் தன்மையையும் கண்டு தன் தங்கையிடம் இழுத்துச் செல்லப்பட்டான் அற்புதன்.

''நானும் தான் ஏ.....எல் எக்சேம் எடுக்க வேணும். என்னைத் தட்டியெழுப்ப யாருமில்லையே தங்கா நீயாவது என்னுடன் இன்று இருந்திருந்தால் எனக்கு எத்தனை ஆறுதலாக இருக்கும்டா உனக்காக என்றாலும் நான் படித்து ஒரு நிலைக்கு வந்து இருப்பேனே. நான் ஓ..எல் எக்சேமில் பத்து பாடமும் 'ஏ' எடுத்த போது கட்டியணைத்து முத்தமிட்டு என்னை மகிழ்ச்சிப்படுத்திய நீ இன்று உன் ரிசல்டைப் பார்க்காமலே போய் விட்டாயே தங்கா, டிசம்பர் -26 உன் பிறந்த தினம். நித்திரையில் இருந்த உன்னை எழுப்ப விருப்பமில்லாது வந்து வாழ்த்துச் சொல்வோமே என்று டியூசன் போய் விட்டேன்டா. உன் பிறப்பு நாளே உனக்கு இறப்பு நாளாக அமையும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லையடா'' என்ற பாழைய நினைவுகளில் மூழ்கிக் கொண்டிருந்த அற்புதனை ஆதரவாக நாடியது இருகரங்கள்.

தேவ் என்றே எல்லாராலும் அழைக்கப்பட்ட அவரது முழுப்பெயர் ராம்தேவ். எல்லோராலும் மதிக்கப்பட்டவர் மரியாதை செலுத்தப்பட்டவர் தர்மம் செய்வதில் வல்லவர். சேவையுள்ளம் கொண்டவர். கல்வியறிவு நிரம்பியவர் அழகிய கட்டமைப்புக் கொண்ட உடலைக் கொண்டவர். அவரது சேவை உள்ளம் தான் அந்தத் தனியார் நிறுவனத்தின் இயக்குனர் என்ற மேன்மைக்குக் காரணமாகியது. பல இடங்களுக்கும் சென்று பணியாற்றிய இவர் தனது வாழ்வில் எத்தனையோ மனிதர்களைச் சந்தித்தார்.

இன்று ராம்தேவ் சொத்திழந்து, சொந்தமிழந்து, சுகமிழந்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையிழந்து, மனைவியிழந்து, மக்களையிழந்து தனிமரமாக வாழ்விலே பற்றற்று பரிதவித்துக் கொண்டிருக்கிறார். " அன்று நான் செய்த அந்த மாபாதகச் செயல்தான் இன்று என்னை இந்த நிகர்க்கதிக்குள்ளாக்கியதோ. 'சீதனத்தோட நீ கட்ட வேணும்' என்ற என் தாயின் பேச்சாலே, வற்புறுத்தலாலே, வசைமொழி தாங்க முடியாது, என்னை நம்பி திருமணத்துக்கு முன்பே இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்த வேணுதாவைக் கைவிட்ட பாவத்தின் கொடூரம் தான் இதுவோ. அன்பு மழை பொழிந்து நின்றவள் அவள். அவள் என்னிலே வைத்த அந்த அன்பு புனிதமானது. மூத்தவனுக்குப் பத்து வ்யதாக இருக்கும் போது தான் என் தாயிடம் எனது மறைந்த வாழ்வு பற்றி ஒன்றும் மறைக்காமல் சொன்னேன். என் கதை எடுபடவில்லை. இறுதியில் எனக்கு சட்டப்படியும் சம்பிரதாயப்படியும் எனது ஊரில் கலியாணம் நடந்தது. திருமணம் நடந்த பின்னும் மறைந்த வாழ்வு வாழ்வோம் என நினைத்த எனக்கு பெரும் ஏமாற்றம். வேணுதா என்னை ஏற்கவில்லை. 'நீ மாபாதகன், ஏமாற்றுக்காரன், கொடூரக்கொலைஞன், பொறுக்கி.......' என்று எத்தனையோ தகாத வார்த்தைகளைக் கூறிக் திட்டினாள். அன்று தான் அவளை வெறுத்த முதல் நாள். அவளது வார்த்தைகளால் ஏற்பட்ட தாக்கத்தால் அருகில் கிடந்த பொல்லொன்றை எடுத்து அவளைத் தாக்கினேன். மண்டையில் அடிபடவே மயக்கமுற்றாள். என் மகன் கூரிய கத்தியொன்றை எடுத்து என்னைக் குத்த வந்த போது அவனையும் அடித்துத் தள்ளிவிட்டு காரில் ஏறி வந்து விட்டேனே" என்று தன் குற்றவுணர்வை எண்ணி மனம் புழுங்கினார்.

அதன் பின் வேணுவோடு தான் நடத்திய குடும்ப வாழ்வைப் பற்றிச் சிந்திக்கவு மில்லை நினைக்கவுமில்லை. முறைப்படி திருமணம் செய்தவளுடன் சுகபோக வாழ்க்கை நடத்தினார். வெளிநாட்டு உதவிகள் ஏராளம் கிடைக்கவே கடற்கரை ஓரத்தில் பெரியதொரு ஹோட்டல் ஒன்றைக் கட்டி அதில் தன் பிள்ளைகளுடனும் மனைவியுடனும் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தார். ஆழிப்பேரலை ஏற்பட்ட அந்த நாள் ராம் வேலையின் நிமித்தம் வெளியூர் சென்று இருந்தார். வந்த பின்தான் வாழ்க்கையின் சிகரங்கள் எல்லாம் சிதைக்கப்பட்டதை கண்டு கதிகலங்கி நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வேணுதாவை நீ இரத்த வெள்ளத்தில் உயிரோடு விட்டு விட்டு வந்தாயே. இன்று உயிரற்ற உடலுமின்றி, உனக்கென்று உறவு மின்றி உலா வருகின்றாயோ நீ செய்த பாவத்தின் விளைவோ இது உன்னை நம்பி இருந்த அந்த ஜீவன்களை உதறித் தள்ளி, கோழைத் தனமாக இரண்டாம் முறை திருமணம் செய்த பின், ஒரு முறை கூட அவர்களைப் பற்றி நினைக்காமல் இருந்ததற்கு கிடைத்த தண்டனையோ இது '' என்று ராம்தேவ்வின் மனச்சாட்சி அவரைத் தினம் தினம் தாக்கிக் கொண்டேயிருந்தது. அனைவரையும் அழித்தொழித்த ஆழிப்பேரலை அடங்கிவிட்டாலும் ராம்தேவ்வின் மனதில் ஆழியின் அலைகள் ஓயாது ஓசையிட்ட வண்ணமேயிருந்தன.

இந்த வேதனையோடும் விரக்தியோடும் வேணுவைத்தேடி அவளிடம் மன்னிப்புக் கேட்கும் நோக்குடன் அவளது பழைய இருப்பிடத்துக்குச் சென்றார் ராம்தேவ். தன்னால் ஏற்பட்ட அந்தக் காயத்திற்கு பின் அவள் எங்கு சென்றாள் என்பதே அயலாருக்குக் கூட தெரியாதது கண்டு மீண்டும் மீண்டும் அவர் உள்ளத்தில் ஆழிப் பேரலைகள் மோதிக் கொண்டேயிருந்தது.

ராம் தேவ்வை இந்நிலையிலேயே விட்டு விடக்கூடாது என்று எண்ணிய நண்பர்கள் மீளவும் அவரை மாபெரும் சேவையாளனாக மாற்ற முற்பட்டு மக்களுக்கு இந்தக் கொடூர வேளையில் உதவிக்கரம் நீட்ட வற்புறுத்தி அழைத்தனர் அவர்களது அழைப்பைத் தட்டாது அன்புப்பணிக்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணித்து முழுமூச்சுடன் செயலில் இறங்கினார் இவ்வாறு தொண்டாற்ற ஆரம்பித்த அவருக்கு வெளிநாட்டில் இருந்து மீளவும் பணமும், பொருளும் குவிய ஆரம்பித்தன. இவற்றைக் கொண்டு ஆழிப்பேரலையில் அநாதையாக்கப்பட்ட பிள்ளைகளுக்கான இருப்பிடம் ஒன்றை அமைத்து பணியாளர்களைக் கொண்டு அந்தக் காப்பகத்தை பராமரித்து வந்தார்.

அற்புதனை அரவணைத்த அந்த இருகரங்களிற்கு உரியவர் தம்பி எத்தன நாளைக்கித்தான் இப்பிடி இருக்கப் போறா. எழும்படா உன்னைப் பற்றிப பேச உறவு இல்லாட்டாலும் ஊர் இருக்குதுடா உனக்காக இல்லாட்டாலும் ஊருக்காகவாவது உழை தம்பி'' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் மாற்றம் ஏற்படக்கூடியதாக ஆறுதலாகவும் ஆதரவாகவும் பல அறிவுரைகளைக் கூறி நின்றார். அவர் ஒரு குருவானவர்.

''ஐயோ என்ர இரத்த உறவுகளை மறக்க ஏலா ஐயா நான் படிக்க வேணும் எண்டு அப்பா இல்லாம அம்மா வீடு வீடா வேலை செய்து பட்ட கஸ்டம் தான் எத்தன. மா இடிச்ச கையில காய்ச்சின தழும்புகளோட அடுத்த வீட்டில போய் உடுப்புக் கழுவிக் குடுத்தத என்ர கண்ணால கண்டு, நான் படிக்கல்ல வேலைக்கி போறன் எண்டு சொல்லியும் என்ர தெய்வம் என்னை விடல்ல. நீ படி மகனே எண்டுதானே கெஞ்சி நிண்டாங்க'' என்று தன் மன உளைச்சல்கள் அனைத்தையும் வாய்விட்டுக் கதறித்தீர்த்தான். அந்தக் குருவின் முன் சுற்றி நின்றவர்கள் கண்களில் இருந்து நீர் வழிந்தோடியது.

குருவானவர் இவனது துயரைக் கண்டு தன்னுடன் அழைத்துச் சென்று வரவிருக்கும் உயர்தரப் பரீட்சைக்காக ஆயத்தம் செய்ய சகல ஒத்தாசைகளையும் வழங்கினார். குருவானவரின் அன்பாலும் பண்பான முன்மாதிரியான வாழ்வாலும் ஈர்க்கப்பட்டு மனித சமூகத்துக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற நல்நோக்குடன் படிப்பில் கவனத்தைச் செலுத்தினான்.

எது எப்படியிருந்தாலும் தன் தாயை நினைத்து ஒவ்வொரு இரவும் அவன் விழிகள் நீரைச் சொரிய மறக்கவில்லை. ஆழிப்பேரலை அடங்கி மூன்று மாதங்கள் கடந்தும் அந்தத் தியாகத்தாய் தனக்காகப் பட்ட துன்பதுயரங்களும் தன் இரு விழிகளாகத் தன்னையும் தங்கையை யும் கவனித்த நாட்களை எண்ணி எண்ணி மனம் வெதும்பினான்.

குருவானவரது உதவியுடன் காலத்தைக் கடத்திக் கொண்டி ருந்தவனது வாழ்வில் திடீரென ஒரு திருப்பம் ஏற்பட்டது உயர்கல்விக் காக 2 வருடங்கள் இலண்டன் பல்கலைக்கழகம் செல்ல வேண்டிய நிலை குருவானவருக்கு ஏற்பட்டது. ராம்தேவ்வின் அநாதைகள் இல்லத் தில் பரீட்சை எடுக்குமட்டும் இருந்து படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு களைக் குருவானவர் செய்தார். அதன் பின் புடவைக் கடையொன்றில் கணக்காளராக பணியை மேற்கொள்ளவும் வழி செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு அற்புதனிடம் வந்த போது ''ஐயா இன்டைக்கு O/L ரிசல்ட் வந்துட்டுதாம். தங்கச்சிட ரிசல்ட்ட பாக்க வேணும்'' என்று கூறியவுடன் தனது மோட்டார் சைக்கிளில் அழைத்துக் கொண்டு பாடசாலையை அடைந்தார் அறிவித்தல் பலகையில் போட்டிருந்த பெறுபேறுகளை நெருக்கியடித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர் மாணவர்கள். அவரவர் தமது பெறுபேறு களை பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட அவனது கண்கள் குளமாகின.

''ஐயா, தங்கா, இருந்திருந்தால் இந்த இடத்தில் அவளும் நின்று கொண்டிருப்பாளே என்னைப் போல கெட்டிக்காரி எண்டு டீச்சஸ் சொல்லுவினம்'' என்று கூறியபடி, அவனது காதில் கேட்ட அந்தக் குரலொலியைக் கேட்டு முண்டியடித்து முன்னால் சென்று ''என் செல்லமே நீ உயிரோடு தான் இருக்கிறியா? என்னால் நம்ப முடியவில்லையே'' என்று தன் தங்கையைக் கண்டு கட்டியணைத்துக் கதறினான்.

''அண்ணா நீயும் உயிரோடு இருக்கிறியா! அண்ணா நானும், அம்மாவும், அலையில மோதிக் கொண்டு போனனாங்க. 'போட்' ஒன்டு மிதந்து வர நான் அதப் பிடிச்சிட்டன் அம்மாவும் அப்பிடி வருவா எண்டுதான் நினைச்சன். அவசெத்திட்டா 'போர்ட்' எங்கோ ஒரு கரையில போய்ச் சேர்ந்திட்டுது. பிறகு அகதிமுகாமில் இருந்த என்னைய யாரோ ஒரு அம்மா கூட்டிக்கொண்டு அநாதை மடத்தில சேர்த்திட்டா. நான் உங்கடயும் அம்மாட நினைவோடையும் ஒவ்வொரு நாளும் அழுதழுதான் அண்ணா இருக்கிறன்'' என்று தன் ஆதங்கத்தைக் கொட்டித்தீர்த்தாள்.

''அற்புதா உன்ர தங்கச்சிக்கும் உன்னப் போல பத்தும் 'ஏ' தான்டா இப்ப சந்தோசம்தானே. உன்ர தங்கச்சி இருக்கிற இடத்தில தான் உனக்கும் இருக்க ஏற்பாடு செய்தனான். எல்லாம் பொருத்தமாய் போச்சு.'' என்று எல்லாவற்றையும் கேட்டு நின்ற குருவானவர் பேரானந்தத்துடன் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கையின் இருப்பிடத்திலே தனக்கும் ஓர் இடம் கிடைத்ததை மிகவிருப்புடன் ஏற்றுக் கொண்டு, குருவானவருடன் சென்ற போது தங்கையே அவர்களை ஆவலுடன் வரவேற்றாள். ''அண்ணா எங்கட பெரியவர் நல்லவர். அன்பானவர். என்னோட அவருக்கு சரியான விருப்பம் மகள், மகள் எண்டு வாய் நிறையச் சொல்வோர்'' என்று அவரைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கும் போது ராம்தேவ் வந்தார்.

''தங்கா, இவனா உன் பெரியவன்? பசுத்தோல் போர்த்திய புலி என் தாயை இரத்த வெள்ளத்தில் துடிதுடிக்க விட்டுச் சென்ற மா பாதகன். இந்தக் கயவனை என் கண்களால் ஒரு நாள் கூடக் காணக் கூடாது என்றிருந்தேனே. இவனால் என் தாய் பட்ட வேதனைகள் தான் எத்தனை! வேண்டாம் எமக்கு இந்த இடம் வேண்டாம் வாம்மா நாம் போவோம்'' என்று ஆவேசத்துடன் தங்கையைக் கையில் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே ஓடினான். ராம் நிலத்தில் சரிந்தார்.

ஏற்கனவே அற்புதன் மூலம் அவனது கதையை அறிந்த குருவானவருக்கு எல்லாம் விளங்கிவிட்டது. தமையனின் மூலம் ராம்தேவ்தான் தம் தந்தை என்பதையறிந்து அதிர்ச்சியடைந்தாள் தங்கை.

குருவானவர் இருவருக்கும் வேறோர் தனி இடத்தை ஏற்பாடு செய்து கொடுத்தார். அண்ணனின் அரவணைப்பிலும் தங்கையின் பாசத்திலும் இருவரும் காலத்தைக் கடத்தினாலும் ஆழிப் பேரலையால் அடித்துச் செல்லப்பட்ட அன்னையின் நினைவலைகள் அவர்களது அகத்தைவிட்டு அகலவில்லை.

*பிறர் கடமைகளைச் செய்வதை விட தவறாயினும் தன் கடமைகளைச் செய்தல் நன்று. பிறர் வழி செல்லுதல் அபாயகரமாதலின் பிறர் கடமைகளில் ஈடுபடுதலின் - தன் கடமையை செய்கையில் அழிவுறுதலும் நன்றாம்.*

*- பகவத் கீதை -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල -2005.
## කෙටි කතා
## ප්‍රථම ස්ථානය - පී. ඩබ්ලිව්. සසංකා චාමලී මෙය.

# මුහුදුරළ

හිරු බැස යාමට තවත් හෝරා කිහිපයක් පමණක් ඉතිරිව ඇත. බැලු බැලු අත පවතින්නේ දැඩි හුදෙකලා බවකි. සුදු වැල්ලේ හැපෙමින් දඟකළ රළ පහර එදා තරම් අද සුන්දර නැතැයි මට සිතේ. ඈත මුහුදේ සිට පෙරළී එන රළ වැල්ලේ හැපෙන්නේ හැම ජීවිතයකටම බාධා වැට කඩොළු ඇති බව කියා පාමිණි. සුන් බුන් රැඳි වෙරළ තීරයේ ඉදිරියටම මා ගමන් කළෙමි. වැල්ලේ රැඳි සුන් බුන් අතරේ පරඬැල් වූ බෝනික්- කෙක් මා නෙත් ගැටුණි. මගේ ජීවිතයද මේ බෝනික්කාගේ ජීවිතය මෙන් නොවේදැයි මට සිතුණි. හමා ආ සිහිල් සුළඟ ගතට වැකුනේ සන්තකේටම හිමිවූ අතීතයේ සුවඳ ගොඩ අවුස්සමින් වාගේය. නිසංසල මුහුදු වෙරළත් හුදෙකලා බවත් මා අතීතයට ඇද ගෙන යාමට දැක්වුයේ මහත් උනන්දුවකි. සුමුදු වැල්ලේ පසෙකින් හිඳගත් මා ඒ සුන්දර වුත් අසුන්දර වුත් අතීතය තුළ සැරිසරන්නට විමි. ඒ 2004 වර්ෂයේ අවසන් කාලසීමාවයි.

'ලොකු පුතේ, කාගෙන්ද ලියුම' චිත්ත රෙද්දෙන් අත පිස දමමින් අම්මා මිදුලට පැමිණියේ බයිසිකල් සීනු හඬ දිගේය.

'ජගත් අයියගෙන් අම්මේ, අක්කට, මා ගෙතුළට ගොස් අක්කාට ලිපිය දුන්නෙමි.මාස අටක පමණ දරු ගැබක් දරා සිටින ඇය හැමදා, පෙරමග බලා සිටින්නේ යුධ හමුදාවේ සේවය කරන ඇගේ සැමියාගෙන් ලිපියක් බලාපොරොත්තුවෙනි. දරුවා ලැබීමට දින ළංව ඇති බැවින් ඇය අප නිවසට පැමිණියේ, කුළුඳුල් දරුවා බිහි කිරීමේදී දියණියක තම මව වෙත පැමිණිය යුතුය, යන මතය නිසාම වන්නට ඇත.

'මොනවද දුවේ, ජගත් ළමයා කියලා තියෙන්නේ 'අම්මාට ලියුමේ ඇති දෑ දැනගැනීමට ඇත්තේ ඉස්පාසුවකි.

'නත්තල් පහුවෙලාලු නිවාඩු ලැබෙන්නේ අම්මේ, නත්තලට එන්න වෙන්නේ නැතිලු', අක්කා අම්මාට කියනු මට ඇසේ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'එතකොට දුවේ උඹට දරුවා ලැබෙන්න දින දීලා තියෙන්නේ කවදටෙයි' 'ජනවාරි මැද හරියට අම්මේ'

'හ්ම්..........' හූම්ටි තබමින්ම අම්මා කුස්සියට ගියාය. මේ දින කිහිපයේ අම්මාගේදැඩි අවදානය යොමුවී ඇත්තේ අක්කා වෙතටය. අක්කාට දරුවා ලැබෙනවිට ජගත් අයියාද ළඟ සිටිනවානම් හොඳයැයි අම්මා නිතර පවසනු මට ඇසී ඇත. අම්මා මේපිළිබඳ පමණට වඩා සිතනවා යැයි විටෙක මට සිතේ. නමුත් 'අම්මා' යනු පරිසමාප්ථාර්ථයෙන්ම එවැන්නියක විය යුතුය. තම දරුවා පවුල පිළිබඳ විනා කිසිම මොහොතක ඇය වෙනකක් පිළිබඳ නොසොයයි.

අම්මා පසු පස කුස්සියට ගිය මා දොරකඩ හිඳ ගතිමි. කෝ අම්මේ නංගි, මා අම්මාගෙන් විමසුවේ ඇය පෙනෙන්නට නොසිටි හෙයිනි. 'ඔය කොම්පියුටර් පංතියක් බලන්න කියලා ගියේ ' අම්මා කීවාය. මෙවර සාමාන්‍ය පෙළ විභාගයට පෙනී සිටි නංගි ප්‍රතිඵල බලාපොරොත්තුවෙන් සිටී. ඇ ඉහළින්ම විභාගය සමත් වන බවට ඇයට දැඩි විශ්වාසයක් පවතී. එය සැබෑය. විභාගය වෙනුවෙන් නංගී අපමණ වෙහෙසක් දැරුවාය. උසස්පෙළ ජීව විද්‍යා අංශයෙ න් හැදෑරීම ඇගේ එකම බලාපොරොත්තුවයි. විශ්ව විද්‍යාලයට ඇතුලුවීමටද මා තුළද එදවස පැවකියේ මහත් උනන්දුවකි. නමුත් ඒ සඳහා ප්‍රතිඵල ප්‍රමාණවත් නොවීය. නැවත වතාවක් විභාගයට පෙනී සිටීමට අවශ්‍යතාවය තිබුණද පවතින ජීවන තත්වය හමුවේ එය අපහසු බව වැටහුනු හෙයින් එම අදහස අතහැර රැකියාවක් සෙවීමට තීරණය කර ගතිමි. නමුත් එයද ලෙහෙසි පහසු කාර්යයක් නොවන බව දැං දැං මටද වැටහේ. ඈත පොල්රුප්පාව දෙසින් ඇදෙන රුව මා හඳුනාගත්තේ දෑසේ හුරුවට වාගේයි. ලොකු පරංකුරියන් දෙදෙනෙකුද අතේ එල්ලාගෙන ඒ එන්නේ තාත්තාය. පෙරදා හැන්දෑවේ සිට මහ මුහුද හා මහා සටනක යෙදෙන ඔහු ගමන අවසන් කරන්නේ පසුදා උදෑසනය. ඔහු දරන වෙහෙස මහන්සිය පිළිබඳ මට දැනෙන්නේ මහත් වූ වේදනාවකි. පවුලේ ජීවන බර තාත්තා තනිව උසුලයි. මෙයට මටද උරදිය හැකිනම් යැයි සිතෙනා වාර අනන්තය. නමුදු මට හරි හමන් රැකියාවක් නොමැත. තාත්තාගේ රැකියාවට උදව්වීමට ඇසුවද තාත්තා ඊට කිසිසේත්ම කැමති නැත. "මුහුදු රස්සාවෙන් මං විඳින දුක හොඳ- ටෝම ඇති, මට පුලුවන් විදිහට මං උඹලට උගන්වනවා. උඹලා ලොකු මහත්තුරු වෙන්නෝනි, මේ රස්සාවල් උඹලට හරියන්නෑ" ඒ තාත්තා නිතරම පවසන්නකි. තාත්තා මේනොකියා කියන්නේ 'ධීවරයගේ පුතා ධීවරයෙක්ම වෙන්නට උවමනා නැතැයි' යන්නය. නමුත් තාත්තාගේ දැඩි අකමැත්තෙන් වුවද මල්ලී නම් තාත්තා සමඟ එකතු වී මුහුදු යයි. සාමාන්‍ය පෙළ විභාගයෙන් පළමුවර අසමත් වූ ඔහු නැවත විභාගයට පෙනී



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සිටීමට අකමැති විය. "මෙන්න මේක හොඳට උයලා ලොකු කෙල්ලට දීපං, ඒකිට හොඳට කන්න දෙන්න ඕන" කූඩ්ඩිය පැත්තෙන්ම ගෙට ගොඩවූ තාත්තා පරා කූරියන් දෙදෙනා අම්මා අතට දෙමින් පැවසුවේය. "අද ජගත් පුතා ලියුමක් එවලා, නත්තල පහුවෙලා නිවාඩු හම්බවෙනවය කියලා තියෙන්නේ "කහට කෝප්පය තාත්තා අතට දෙමින් අම්මා පැවසුවාය. "මං හිතාන ඉන්නේ කොහොමහරි තව සල්ලි ටිකක් හොයාගෙන මං අර කියාපු බෝට්ටුව ගන්න; තවත් නං ඔස්ටින් කාරයගේ ගණං බලන්න බෑ. ඌ මහා එපා කරපු එකා; අද ඔක්කොම මාළු කිලෝ හයක් , හෙණගහන්න ඕකට තුට්ටු දෙකේ ලාභයවත් මට නෑ. මහන්සිය විතරයි. ඒ උනාට ඌ, තට්ටු ගානට ගෙවල් ගහනවා. අදත් පොඩි එකා රංඩුවට යන්න ගියේ. මට බෑ ඌත් 'එක්කරාජකාරි කොරන්නට. ඌට හොස්ස ළඟින් මැස්සා යන්න බෑ." තාත්තා ඒ බනින්නේ මල්ලීටය. මල්ලී ඉතා ඉක්මණින් කේන්ති ගන්නා පුද්ගලයෙකි. තාත්තාත් මල්ලීත් මුහුදු යන්නේ ඔහුගේ බෝට්ටු වලිනි. නමුත් ඔස්ටින් තමා ගැන විනා අන් කිසි කෙනෙකුන් ගැන සිතන්නේ නැත. ඒ නිසාම තාත්තා බෝට්ටුවක් මිළට ගැනීමට දැඩි උනන්දුවක් දක්වයි. "ජනවාරි පළවෙනිදා වෙනකොට බෝට්ටුව මුහුදට දාගන්න පුළුවං උනොත් සන්තානම්මෑ ණියන්ගේම පිහිටයි." "ඉතිං ඔය කිව්වට පුළුවනෑ, සල්ලි හොයාගන්නේ කොහොමෙයි ?" "තව ටිකනේ අඩු ,මං සෝමදාස මුදලාලිට කතා කරලා බැලුවා මිනිහා ළඟ නම් පොලිය ටිකක් අඩුයි. මං හිතං ඉන්නේ පොළියට සල්ලි ටිකක් ගන්න කියලා." "පොළියට අරං කොහොමෙයි තව දවස් කීයද නත්තලටත් . ඒ විතරයෑ, පොළී ගෙවන්නගියාම තමා තේරෙන්නේ ,ලොකු කෙල්ලට කොයි වෙලේ අමාරු වෙයිද දන්නේ නෑ.අනේ කීයක් හරි තියෙන්ටම ඕනි කාලේ ,අනේ මංදා මේ හැම එකම ඉතිං කරන්නත් එපැයි. ලොකු කොල්ලටත් හරි හමන් රස්සාවක් තිබුණනං ................ අම්මා සුපුරුදු පරිදි කථාව ඇරඹුවොත් අවසන් කරන්නේ එසේය. එය දැං ඇයටද පුරුද්දක් වී හමාරය. ඇතිං එන මල්ලි දුටු මම වාඩිවී හුන් තැනින් නැගිට ඔහුවෙත ගියෙමි. "මොකද? අදත් ඔස්ටින් එක්ක රංඩුවට ගියාය කියන්නේ ,"මා මල්ලීගෙන් විමසුවෙමි. "ඌත් එක්ක රාජකාරි කරන්න බෑ අයියේ මෙලෝ යකෙකුට, ඌ මහම මහා එපාකරපු එකෙක්. අම්මපා දවසක මං ඕකගේ දත් ඇන්ද ගලෝලා විසි කරනවා මුහුදටම"
"ඕව ඔහොම තමයි මල්ලී, මේ ඔක්කොම මිනිස්සු කරන්නේ ඉතිං ජීවත් වෙලා ඉන්නකංනේ. "

"අපි විතරයි අයියේ ඔහොම හිතන්නේ උං හිතං ඉන්නේ උං කවදාවත් මැරෙන්නේ නෑකියලා ඒ ගානට තමයි උන්ගේ වැඩ." මල්ලී පවසන්නේ වයසින් මුහුකුරා ගිය අයෙකු පරිද්දෙනි. නමුත් අද මල්ලී සිටින ස්ථානයේ සිටිය යුත්තේ මා නොවේදැයි මට සිතේ. "අයියා ඔය කොහෙ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

යන්නෙයි" පාර පැත්තට යනු දුටු මා දැක මල්ලී විමසුවාය. "පෝස්ට්ඔෆිස් එකට ගිහිං එන්නම්" මල්ලීට කියමින්ම මා යන්නට ගියෙමි. මේ මාගේ දිනචර්යාවේ එක් අංගයකි. ගැසට් පත්‍රය පරීක්ෂා කර බලා කොපමණ ඉල්ලුම්පත්‍ර දැමුවදඉන් එකකටවත් පිළිතුරක් නම් ලැබෙන්නේ නැත.

හමුදා සේවයට බැඳෙන්නට අම්මාගෙන් අවසර ලැබෙන්නේද නැත. ඒ ගැන ඇසූ විට ඇය පවසන්නේ බඩේ ගින්දරෙන් ඉන්නට බැරි බවය. නමුත් දැං සාමය පවතින බව කියූවද අම්මා පවසන්නේ ඔය සාමය කවදා කෙසේ කොහෙං කෙළවර වෙයිද යන බව කවුරුත් නොදන්නා බවය. විටෙක ඇය නිවැරදි නොවේදැයි මට සිතේ. සුපුරුදු ලෙස කාලය ගෙවී ගියේ මුළු ලෝකයටම සාමය සතුට රැගත් ප්‍රීතිමත් නත්තල උදාවෙමිනි. කෙතරම් අගහිඟකම් පැවතුනද සෑම වසරකම අප නත්තල සැමරීමට අමතක නොකළෙමු. මෙවරද හැකි පමණ අම්මා ඒ සඳහා සූදානම්ව සිටි බවක් පෙනෙන්ට තිබුණි. මධ්‍යම රාත්‍රී දොලහ වන විට අප සියලු දෙනාම පල්ලිය වෙත ගියෙමු. ඒ නත්තල වෙනුවෙන් පවත්වන විශේෂ දේව මෙහෙය සඳහාය. පල්ලිය පුරා දැල්වෙන ඉටිපහන් එළියෙන් ශුද්ධවූ ජේසුතුමන්ගේ රූව ජීවමානව පෙනෙන්නාක් මෙනි. ජීවිතයේ කොතෙකුත් දුක් කම්කටොළු තිබුණද ඒ දෙව්පුත් රුව ඉදිරියේ සියල්ල පහව යයි. අහිංසකත්වයේ ප්‍රතිමූර්තිය වූ මරියතුමියගේ රූව අසල වැටී යාඥා කරන අක්කා මා දුටුවේ අහම්බෙනි. මරියතුමී තරම් වූ උතුම් දරු සෙනෙහසක් තම දරුවා වෙනුවෙන්ද ලබා දෙන මෙන් ඇය ඉල්ලා සිටින්නට ඇත. පසුදා උදෑසන තාත්තාත් මල්ලීත් පිටත්වූයේ පොළී මුදලාලි හමුවීමටය. අක්කාත් නංගීත් ජගත් අයියලාගේ නිවසට ගොස් තිබූ බැවින් ගෙදර සිටියේ මමත් අම්මාත් පමණි. කම්මැලිකම නිසාම කමිසයක්ද ඇඟලා ගත් මා පාර දෙසට යාමට පිටත් වුණෙමි. නමුත් මා හට යා හැකි වූයේ අඩි කිහිපයක් දුර පමණි. මහා ශබ්දයක් නගමින් කිසිවක් මා පිටුපස හඹා එනු මට දැනිනි. මා පසුපස හැරී බැලුවෙමි. ඒ ඉතා විශාල වූ මුහුදු රළකි. මින් පෙර කිසි දිනක මා එවැනි රළක් දැක නොමැත. දිවීමට දැඩි වෙහෙසක් දැරුවද මගේ දෙපාවලට වඩා වේගවත් වූ මුහුදු රළ උකුස්සකු තීක්ෂණ ලෙස මත්සයකු ඩැහැගන්නා පරිදි මා ඩැහැගෙන ගියේය. මට මතක එපමණකි. දිගු නින්දකට වැටුණා බඳු හැඟීමක් මට ඇති විය. මා දෙනෙත් විවර කළේ දැඩි ආයාසයකිනි. කිසිදෙයක් හරිහැටි වටහා ගැනීමට මට නොහැකි විය. උන් තැනින් නැගී සිටීමට තැත්කළද මගේ ශරීරය මත මහා බරක් පැටවී ඇති පරිදි මට හැඟුනි. දැඩි ආයාසයකින් යුතුව මා නැගී සිටියෙමි. මා මේ සිටින්නේ පල්ලියේ බව මට හැඟුනේ එවිටය. පල්ලිය පුරා මහා සෙනඟක් පිරී සිටියහ. ඒ අතර හඬා වැලපෙන මිනිසුන් බොහෝය. සියල්ලන් අතරින් මා ඇවිද ගියේ සිදුවූයේ කුමක්දැයි හරි හැටි දැනගැනීම පිණිසය. පල්ලියේ ගේට්ටුව අසල සිටි කිහිප දෙනා අතුරින් මා මිතුරු


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අමිලව මා දුටුවේ අහම්බෙන් මෙනි. දැඩි සතුටට පත් මා අමිල අසලට ගියෙමි. "අමිල මොනවද බං මේ වෙලා තියෙන්නේ" කිසිවක් නොදත් මා අමිලගෙන් ඇසුවෙමි. "මුහුද ගොඩ ගළලා මහේෂ්, වැල්ලේ තිබුණ ගෙවල් ඔක්කොම ගිහිං. මෙහෙ විතරක් නෙවෙයි තිරිකුණාමලේ, මඩකළපුව, ගාල්ල, මීගමුව මුහුදු බඩ පළාත් සේරටමලු" "මොනවා" කිසිවක් අදහා ගත නොහැකිව විසල් දෙනෙතින් යුතුව මා අමිල දෙස බලා සිටියෙමි. "මෙහෙට ආපු කෝච්චියත් තෙල්වත්තෙදි පෙරළිලාලු, ආරංචි විදියට තවම කිසි කෙනෙක් බේරගෙන නැතිලු", අමිල, ඔහු දන්නා සියලු තොරතුරු කියාගෙන යයි. "උඹට කියන්න මහේෂ් අපේ ගෙවල් ඔක්කොම ගිහිං," එවර ඔහුගේ හඬ හැඬුම්බරය. අමිලගේ දෙනෙතේ දිදුලන කඳුළු කැට මම දුටුවෙමි. මට කෑ ගැසුනේ එක්වරමය. "කෑගහන්න එපා මහේෂ්, මෙත්න උඹයි මමයි විතරක් නෙමෙයි ඉන්නේ," අමිල මා දැඩිවඅල්ලා සෙලවුවේය. "අනේ අමිල මට අපේ ගෙවල් බලන්න ඕන. මාත් එක්ක යන්න වරෙං මචං" මා අමිලට කිවුවද ඔහු කියා සිටියේ මුහුද දෙසට කිසි කෙනෙකුට යාමට අවසර නැති බවය. එයට හේතුවී තිබුනේ පළමු රැළ පැමිණි පසු ඒ හා සමාන තවත් රළක් නැවත පැමිණීමය. පසුදා උදයේ අමිලත් මමත් අප නිවස තිබූ දෙසට ගියේ මාගේ දැඩි පෙරැත්ත නිසාමය. නමුත් මට දැකගත හැකිවූයේ පොළෝතලයට සමතලා වූ අපේ ගෙවල් පේළියයි. බිමට සමතලා වූ අපේ නිවසේ සුන් බුන් අතරින් මට ගලා ආවේ අපේ සෙනෙහසේ සුවඳය. මගේ තාත්තාගේ දහඩිය සුවඳය. මගේ අම්මාගේ මව්සෙනෙහසේ සුවඳය. අපේ අහිංසක බලාපොරොත්තු සමුදායේ සුවඳය. මගේ පපුව පැලෙන්නට වාගේය. මා පිස්සෙකු මෙන් පොළොවේ හැපෙමින් හැඬුවෙමි. මට කළහැකි වූයේ එපමණකි. සීතල මුහුදු රළක් මා පයේ පැටලුනෙන් එතෙක් මා සැරිසරමින් සිටි අතීතයෙන් මා මිදුනෙමි. මට මතක් වූයේ අවසන්වරට අමිල කියූ වදන්ය. "මහේෂ්, මේක මට, උඹට විතරක් වෙච්ච දෙයක් නෙවෙයිනේ බං මේක අපේ මුළුරටටම වේච දෙයක් හිත හදාගන්න බලපං මහේෂ් ජීවත්වෙලා ඉන්න අපිත් පිස්සෝ වගේ හැසුරුණොත් හරියයිද? උඹ උඹේ නංගී වෙනුවෙන් අක්කා වෙනුවෙන් ජීවත්වෙන්න ඕන. අන්න ඒක හොඳට මතක තියාගනිං" එවදන් මට අදටත් ඇසෙන්නාක් මෙනි. මෙම ව්‍යසනය අප රටට පමණක් නොව මුළු ආසියාකරයටම බලපෑමක් බව දැනගන්නට ලැබුනේ පසුවය. එමෙන්ම එය 'සුනාමි' ලෙස හඳුන්වනු ලබන මහාව්‍යසනයක් බවද පසුව අප දැනගතිමු. අප නිවසේ සුන්බුන් ඉවත්කර අපේ අම්මාගේමළසිරුර සොයාගැනීමට අපට හැකිවිය. අප තාගේත් කඳුළු මැද මියගිය තවත් කීපදෙනෙකුගේ මළසිරුරු සමඟ එකම මිනී වළක අපේ ආදරණීය අම්මාද සදහටම අපෙන් සමුගත්තාය. නමුත් අද වන තුරු තාත්තාත් මල්ලීත් පිළිබඳ කිසිඳු තොරතුරක් නැත.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අක්කාටත් නංගීටත් කිසිඳු උවදුරක් සිදුවී නොතිබුණි. තෙල් වත්තේදී අනතුරට පත් දූම්රියේ ජගත් අයියා සිටිබව අප දැන ගත්තේ පසුවය. එම ආරංචිය වූ මොහොතේ සිටම අක්කා සිටින්නේ සිහිවිකලෙන් මෙනි. එනිසාම දරු ප්‍රසූතියේදී අක්කාට ලැබුනේ මියගිය දරුවෙකි. එය අප කාගේත් සිත්තුළට ඇති කලේ මහත් වූ වේදනාවකි. ඇය  අද පටාචාරාවක ලෙසිනි. නව වසරේ තමාගේම බෝට්ටුවක් දියඹට දැමීමට බලාපොරොත්තු පොදි බැඳි මගේ තාත්තාත් මල්ලීත් සිහිවනවිට දැනෙන්නාවූ වේදනාව මෙතෙකයි කීමට නොහැක. අක්කාත් නංගීත් ජගත් අයියලාගේ නිවසේ සිටින අතර මම තවමත් පල්ලියේ සිටිමි. අපැහැදිලිව තිබූ මගේ මගේ අනාගතය දැං පැහැදිලිය. ඒ මගේ අක්කාත් නංගීත්ය. වෛද්‍යවරියක වීමට සිහින මවන මගේ නංගීගේ අනාගතය රැඳී ඇත්තේ මගේ දෑතේය. ඇයට දැන් සිටින එකම පිළිසරණ මමය. එය මා විසින් ඉටුකළ යුතුමය. සුනාමිය බලපෑම් එල්ලකර මේ වන විට සිව්මසක් ඉක්මවී ගොස්ය. නමුත් අප තවමත් අනාථයෝය. හිසට හරි හැටි සෙවණක් අපට නොමැත. කුසට හරිහැටි අහරක් අපට නොමැත. පෙර අප නිවෙස් පිහිටා තිබූ ස්ථාන අද අපට තහනම්ය. ඒ රජය විසින් පනවා ඇති මීටර් සියයේ සීමාව නිසාය. ඉඩම් ලබා දීමට නිවෙස ' තනා දීමට යෝජනා ඉදිරිපත් වන්නේ තරඟයට මෙනි. නමුත් ඒවා ක්‍රියාත්මක වේදැයි අදටත් පවතින්නේ දැඩි අවිනිශ්චිතතාවයකි. කවුරුන් කෙසේ මොනවා කීවද අහිමිවූයේ අපේ ජීවිතය. අපේම දේපළය. ඒ දුක වේදනාව හරිහැටි දන්නේ අපය. අප අනාථයන් වී සිටි කාලය දැන් හොඳටම ප්‍රමාණවත්ය. මීටර් සියයේ සීමාවෙන් එපිට අපට කවදානම් ස්ථිර වාසස්ථාන ලැබෙයිද? නමුත් කීමට එක් දෙයක් පමණක් ඉතිරිව ඇත. එනම් 'මුහුද හා විවාහ වූ අපට ඒ හා දික්කසාද වී සිටිය නොහැකි වීමය'.

නිමි.

எண்ணியது முடிதல் வேண்டும்
நல்லவை எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்

- பாரதி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசத்தில் சுனாமியின் தாக்கம்

பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவானது திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பதினொரு பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒன்றாக திருகோணமலை நகரத்தையும் நகரத்தை சுற்றியுள்ள பிரதேசத்தையும் உள்ளடக்கியதாக இதன் வடபாகம் குச்சவெளி பிரதேச செயலகப்பிரிவும் கிழக்கில் இந்து மகா சமுத்திரமும் தெற்கின் ஒரு பகுதி உள்துறைமுகத்தினையும் மற்றையது கிண்ணியா பிரதேச செயலகப்பிரிவினையும் கொண்டுள்ளதுடன் மேற்கில் தம்பலகமம் மொறவெவ பிரதேச செயலகப் பிரிவுகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. இப்பிரதேச செயலகப் பிரிவு 42 கிராம சேவகர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்படுவதுடன் புவியல் ரீதியாக திருகோணமலை நகரசபை பிரிவு பட்டணமும் சூழலும் பிரதேசசபை பிரிவு ஆகிய இரு உள்ளூராட்சி பிரிவுகளையும் உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது.

பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப்பிரிவில் கிராமசேவை உத்தியோகத்தர்களிடமிருந்து 2004 ம் ஆண்டு இறுதியாக திரப்பட்ட குடித்தொகை மதிப்பீட்டின் படி மொத்தம் 25702 குடும்பங்களைக் கொண்ட 113876 பேர் வாழ்கின்றார்கள். இதில் தமிழர்கள் 77386 பேர் (67 %) சிங்களவர் 21693 பேர் (20%) முஸ்லிம்கள் 33874 பேர் (12%) ஏனையோர் 923 பேர் (1%) ஆகவும் காணப்படுகிறனர். இதில் 55844 பேர் ஆண்களாகவும் 58032 பேர் பெண்களாகவும் உள்ளார்கள்.

மீன்பிடித் தொழிலே இப் பிரதேச செயலகப் பரிவு மக்களின் பிரதான தொழிலாக உள்ளது. என்றும் நாட்டின் அரசியல் நிலமை காரணமாக இத்துறை மேலும் அபிவிருத்தி செய்ய முடியாததாக உள்ளது. இதில் 7000 குடும்பங்கள் மீன்பிடித் துறையை நம்பி வாழ்கின்றனர். இரண்டாவதாக விவசாயம் மக்களின் தொழிலாக இருப்பதுடன் மூன்றாவதாக சேவைத்துறை பிரதான தொழிலாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 26.12.2004 ல் ஏற்பட்ட சுனாமி அனர்தமானது தென்னாசியக் கண்டத்தையும் எமது இலங்கையின் வடக்கு கிழக்கு தென் தென்மேற்கு மாகாணங்களை தாக்கி பெரும் பாதிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியது யாரும் மறக்க முடியாத பெரும் வடுவாகும். அவ்வாறான தாக்கம் எமது பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப்பிரிவில் ஏற்படுத்திய தாக்கங்களை நோக்கலாம்.

ஏறத்தாழ 20 கிராம சேவகர் பிரிவுகள் சுனாமியின் தாக்கத்துக்கு உள்ளாகின.

1. மனையாவெளி
2. வில்லுண்டி
3. தில்லைநகர்
4. உவர்மலை
5. சிவபுரி
6. பட்டணதெரு
7. திருக்கடலூர்
8. முருகாபுரி
9. உப்புவெளி
10. சல்லி
11. அபயபுர
12. லிங்கநகர்
13. சீனக்குடா
14. வெள்ளைமணல்
15. மட்கோ
16. பூம்புகார்
17. கவாட்டிகுடா
18. ஜின்னாநகர்
19. நாச்சிக்குடா
20. பெருந்தெரு

சுனாமியின் தாக்கத்தில் 42723 பேர் இடம் பெயர்ந்து சென்றனர். இதில் 41500 பேர் பாதிக்கப்பட்டவர்கள், 27 நலன்புரி நிலையங்களில் 31953 பேர் இருந்தனர். 4736 பாடசாலை செல்லும் மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். 13 விதவைகள் சுனாமியால் உருவாக்கப்பட்டனர். பட்டணமும் சூழலும் பிரதேசத்தில் 33 இறப்புகள் நடந்ததுடன் மொத்த இறந்தவர்களின் எண்ணிக்கை 83 ஆகும். 10 அடையாளம் காணப்படாத உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. முற்றாக 520 வீடுகள் சேதமடைந்ததுடன், பகுதி சேதமாக 1127வீடுகள் கணக்கீட்டின் பின்னர் அடையாளம் காணப்பட்டன. மொத்தமாக 1380 வீடுகள் பாதிக்கப்பட்டன. இதில் உள்கடல் வலயத்தில் 1147 வீடுகளும், வெளியில் 2330 வீடுகளும் காணப்பட்டன. ((முற்றாக 41வீடுகளும், பகுதியாக 192வீடுகளும்)) பொருளாதார ரீதியாக மீன்பிடித்துறை மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டது. இதில் 6559 மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டதுடன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மீன்பிடி படகு | - | 1118 |
| 2. | வள்ளம் | - | 313 |
| 3. | இயந்திரம் | - | 139 |
| 4. | வலை | - | 1347 |
| 5. | ஏனையவை | - | 12 |

பாதிக்கப்பட்ட போக்குவரத்து வாகனங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கார் | - | 8 |
| 2. | வான் | - | 15 |
| 3. | முச்சக்கரவண்டி | - | 30 |
| 4. | மோட்டர் சைக்கிள் | - | 60 |
| 5. | துவிச்சக்கரவண்டி | - | 520 காணப்பட்டது |

சிறுகைத்தொழில் வியாபார நிலையங்களது - 302

| | | |
|---|---|---|
| விவசாயி | - | 51 |
| கூலி வேலை | - | 2296 |
| மேசன் | - | 183 |
| தச்சன | - | 111 |
| ஏனையவை | - | 903 பாதிக்கப்பட்டது. |

சேவைத்துறை பாதிப்பை எடுத்துக் கொண்டால் வீதி அபிவிருத்தி திணைக்களம், அதிகாரசபை, நகரசபை, பிரதேசபை வீதிகள் மொத்தமாக ஏறத்தாழ 161km அளவில் பாதிப்படைந்துள்ளன. மின்சார இணைப்புகள் 51km தூரம் வரையில் பாதிப்பு அடைந்ததுடன். தொலைபேசி இணைப்புகள் 21km தூரத்திற்கு பாதிப்பு அடைந்தது. தனியார் கூட்டுத்தாபனங்கள், அரச திணைக்களங்கள். சில கட்டடங்கள் மற்றும் தளபாட உபகரணங்களும் ஆவணங்களும் நூல்களும் பாதிப்படைந்தது. சுகாதாரத்துறையில் பொதுவைத்தியசாலையும் மருத்துவ நிலையமும் பகுதியாக சேதமடைந்தன. உப்புவெளி அலஸ்தோட்ட பாடசாலை சேதமடைந்தது அத்துடன் தேசிய நீர் வழங்கள் சபைக்கும் சில பாதிப்புக்கள் ஏற்பட்டன. 21km தூரத்திற்கு சேவை பாதிக்கப்பட்டது. விவசாயத்துறையில் 51 விவசாய குடும்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டதுடன், 20ac விவசாய நெல்காணியும், 150ac மேட்டுநில காணியும் பாதிக்கப்பட்டது.

சுனாமியின் பின்னர் உடனடியான நிவாரண வேலைகள் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட சில குழுக்கள் அமைக்கப்பட்டன.

1. சுனாமி நிவாரண வழங்கல் குழு
2. தரவு சேகரிப்பு குழு
3. Camp மேற்பார்வை குழு

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பின்வரும் உதவிகள் அரசாலும், அரசுசார்பற்ற நிறுவனத்தினாலும் வழங்கப்பட்டது.

1. உலக உணவு 2 வாரம்
2. உணவற்ற பொருட்கள்
3. ஆடைகள்
4. மருந்து வகை
5. உறை பொதிகள்
6. சமையல் உபகரணங்கள்
7. பாடசாலை மாணவர்களுக்கான உதவி செய்யப்பட்டதுடன்.

அரசாங்கத்தினால் பின்வரும் உதவிகள் செய்யப்பட்டன.

1. சமைத்த உணவு - 3 நாட்கள் - 41500 பேர்
2. சுனாமி முத்திரை - 34000 ஆட்கள்
3. சமையல் உபகரணங்கள் - 6152
4. இணைந்த கொடுப்பனவு - 8450
5. இறந்தவருக்கான 15,000.00 கொடுப்பனவு - 83

இதனை விட உடைந்த வீடுகளை திருத்துவதற்கு வீடமைப்பு குழு உருவாக்கப்பட்டது

1. URC
2. DAT
3. Division Grivance Committe
4. Tem Shelters Maintaing



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிக வீடுகள் 510 கட்டுவதற்கு திட்டமிடப்படுவதுடன் 421 கட்டி முடிக்கப்பட்டு 248 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. இதனை விட நிரந்திர வீடுகள் 15. நிதி வழங்கும் முகவர்களின் உதவியுடன் 1147 வீடுகள் கட்டப்படவுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சுமேதங்கரபுர | - | 347 |
| 2. | கோணேசபுரி | - | 488 |
| 3. | லவ்லேன் | - | 191 |
| 4. | சமன்புர | - | 53 |
| 5. | சின்னபிள்ளைச் சேனை | - | 28 |
| 6. | உப்புவெளி | - | 26 |
| 7. | சல்லி | - | 14 |

எவ்வாறாயினும் பட்டணமும் சூழலும் பிரதேச பகுதியில் சுனாமியின் பாரிய தாக்கம் ஏனைய பகுதியுடன் நோக்கும் போது குறைவாகும். காரணம் மலை சார்ந்த சூழ்ந்த பகுதியும் திருக்கோணேஸ்வர பெருமானின் கருணையும் என்றே கூற வேண்டும். எனினும் அழிந்து போன தேசிய சொத்துக்களையும் உடமைகளையும் கட்டுமான வசதிகளையும் மீள கட்டி எழுப்புவது எமது கடமையாகும். எனவே அனைவரது ஒத்துழைப்புடன் சுனாமியின் தாக்கத்துக்குட்ட மக்களையும் பகுதிகளையும் மீள கட்டி எழுப்புவதற்கு வாரீர்!

உதவிதிட்டமிடல் பணிப்பாளர்.
பிரதேச செயலகம்
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவிக்கப்படுபவர்

### திரு பொன்னம்பலம் - கந்தையா (காந்திஜயா)



19.12.1918ல் யாழ்ப்பாணம் மாதகல் கிராமத்தில் பிறந்தார். இளைப்பாறிய ஆசிரியராவர். ஆசிரியராக பணிபுரியும் போது நல்ல ஆசானாக மாணவர் விரும்பும் ஆசிரியராகச் சிறப்பாக பணியாற்றியவர் காந்தியின் கொள்கையைப் பின்பற்றி காந்திய வாதியாக அன்பு நெறிதவறாது - தன்னை சமூகப் பணிக்கும் சமயப்பணிக்கும் அற்பணித்து செயற்பட்டு வந்தார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் இலக்கிய வாதியுமாவார். பல நூல்களுக்கு ஆசியுரை, அணிந்துரை, கட்டுரைகள் ஏராளம் எழுதியுள்ளார்.

1983ல் திருகோணமலையில் வன்செயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சங்கம் உருவாவதற்கு காரணகர்த்தாவாக இருந்து செயற்பட்டார். திருகோணமயையில் இனக்கலவரம் ஏற்பட்டபோது சிவானந்த தபோவனக் குழந்தைகளுக்கு பாதுகாவலனாக பல ஆண்டுகள் இருந்து அவர்களுக்குரிய தேவைகளையும் பூர்த்தி செய்து பணிபுரிந்தார்.

இவரது பண்பைப் பாராட்டி இந்தியா ரிசிகேசம் சுவாமி சிவானந்தர் ''சிரார்த்த ரத்னா'' என்ற பட்டத்தை வழங்கினார். இவரது அறநெறிப் பணியை பாராட்டி இந்து சமய அலுவல்கள் அமைச்சு '' இறைபணிச் செம்மல்'' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. திருமலை வாழ் இந்துமக்கள் இவரது சேவையைப் பாராட்டி 1992 ஆம் ஆண்டில் இவருக்கு பவளவிழா எடுத்துக் கௌரவித்தனர் பல ஆண்டு காலமாக இற்றை வரைக்கும் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் காப்பாளராக இருந்து பணி செய்து வருகின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவிக்கப்படுபவர்

### திரு ஐயம்பிள்ளை. மார்க்கண்டு

**ஆயுர்வேத வைத்தியர்**

**கடல்முக வீதி - திருகோணமலை**



23.06.1924ல் யாழ்ப்பாணம் பலாலி கிராமத்தில் பிறந்தார் தனது இளமைக்கல்வியை முடித்துக் கொண்டு - 1935ல் திருகோணமலைக்கு வந்து தனது சிறிய தகப்பனாரான நாகமுத்து ஆயுர்வேத வைத்தியரிடம் உதவியாளராக இருந்து ஆயுர்வேத வைத்தியப் பயிற்சியைப் பெற்றதோடு வைத்தியத்தையும் கற்றுக் கொண்டார் 1970ஆம் ஆண்டில் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்திரானார். வாதரோகம், சிறார்களுக்கான வைத்தியம் என்பவற்றில் பேர்போன வைத்தியராக வைத்தியம் செய்து வந்தார். 1972ஆம் ஆண்டில் திருகோணமலை திருஞான சம்பந்தர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கற்பக பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவராக இருந்து 1998 ஆம் ஆண்டுவரை சமயப்பணி புரிந்துள்ளார். வசதி குறைந்தவர்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்துள்ளார் கைதடி ஆயுர்வேத வைத்திய கல்லூரியில் பயிலும் மாணவர்கள், இவரிடம் வந்து இலவசமாக ஆயுர்வேத வைத்திய பயிற்சியைப் பெற்றுச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும் இந்துசமய மேம்பாட்டிற்கும் சமூக சேவைக்கும் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## හේවාවිතාරණගේ ආරියසේන මහතා
## අංක 201ල මහාමායාපුරල ත්‍රිකුණාමලය



මොහු උපත ලැබුවේ 1951-07-01 වන දින මාතර දීය. මොහු කුඩා කල සිටම කලාවට දක්ෂතා දැක්වූ අතර පාසල් අධ්‍යාපනය තුලින් ලැබූ කුශලතා වැඩි දුරටත් ප්‍රගුණ කිරීමෙන් අනතුරුව තොරන් ඇඳීම, ගොක්කොල සැරසිලි කලාව, මගුල් පෝරු සෑදීම සැරසිලි කිරීම, බැනර්, පෝස්ටර් ඇඳීම, පිරිත් මණ්ඩප සඳහා සැරසිලි ආදිය සහ තවත් විශාල කුසලතා සම්භාරයක් පිරි තැනැත්තෙකි.


ප්‍රදේශයේ කැපී පෙනෙන දක්ෂතා හෙබි නිහතමානී පුද්ගලයකු බව පැවසීම ඉතා අගනේය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவிக்கப்படுபவர்

### ஜனாப் உமறு லெவ்வை முகமட் இஸ்மயில்
### 25 சனல்லேன் - திருகோணமலை



21-2-1921ல் திருகோணமலையில் பிறந்தார் 1945ஆம் ஆண்டு தனது சட்டத்துறைக் கல்வியை நிறைவு செய்து. சட்டத்தரணியாக சத்தியபிரமாணம் செய்து சேவையாற்றி வருகின்றார்.

1950, 1951, 1952 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நபிகள் நாயகம் ஜனனதினத்தையொட்டி - திருகோணமலை மாவட்ட இலக்கிய போட்டிகளை மிகவும் பிரமாதமாக பொறுப்பாக இருந்து நடத்தியவர் யாழ்பாணத்தில் பல்கலைக்கழகம் ஆரம்பிற்பதற்கு முன்பதாக பல்பலைக்கழகத்தை மட்டக்களப்பிலா, திருகோணமலை யிலா, வவுனியாவிலா, யாழ்ப்பாணத்திலா அமைப்பது என்ற சர்ச்சை உருவாகி இது சம்பந்தமான ஒரு குழுவும் அமைக்கப்பட்டது திருகோணமலை குழுவுக்கு தலைவராக இருந்து திருகோணமலையில் தான் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் மென கூறி அரும்பாடு பட்டவராவர்.

இஸ்லாமிய சங்கத்தின் தலைவராக இருந்து பின்தங்கிய பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகளையும், உதவிகளையும் செய்துள்ளார். இனவஞ்செயலின் போது இன ஒற்று மைக்காக முழுமுயற்சியுடன் செயற்பட்டார். பல்கலைக்கழகம் செல்லும் திருமலை முஸ்லிம் மாணவர்களுக்கு - புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை ஆரம்பித்து உதவி வழங்கியுள்ளார். தற்போது இயங்கும் அன்பு இல்லம் அமைந்துள்ள காணியை உரிமையாளர் ஞானாம்பிகையிடமிருந்து இராமகிருஷ்ணமிஷனுக்கு ஒப்படைப்பதற்கும் அன்பு இல்ல மாணவர்களை அதில் இருத்துவதற்கும் உறுதுணையாக இருந்துள்ளார். இவர் சிறந்த எழுத்தாளருமாவார், பல பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு, கட்டுரை ஆசியுரை, அணிந்துரை, போன்ற வற்றை எழுதியுள்ளார் சிறந்த சேவையாளராகிய இவரது ஐம்பது வருட சட்டத்தரணி சேவையின் பூர்த்தியைப் பாராட்டி சட்டத்தரணிகள் சங்கம் விழாவெடுத்து கௌரவித்தது. குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவு சாகித்திய விழா - 2005

### கட்டுரை கவிதை சிறுகதை போட்டிகளின் முடிவுகள்

01. கட்டுரை (பாடசாலை மட்டத்திலானது)

**கனிஷ்ட பிரிவு**

1ம் இடம் :- சுகன்ஜா மணிவண்ணன்
திரு/சென் மேரிஸ் கல்லூரி திருகோணமலை.

2ம் இடம் :- சு. பிரியங்கன்
தி/இ.கி.மி.ஹி கோணேஸ்வரர் இந்துக்கல்லூரி
திருகோணமலை

3ம் இடம் :- சி. விவேக்
தி/ இ.கி.மி.ஹி கோணேஸ்வரர் இந்துக்கல்லூரி
திருகோணமலை

**சிரேஸ்ட பிரிவு**

1ம் இடம் :- செல்வி P. சரண்யா
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரி
திருகோணமலை.

2ம் இடம் :- செல்வி சாகித்யா இராதாகிருஸ்ணன்
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரி
திருகோணமலை

3ம் இடம் :- செல்வி போஜிப்பிரியா வாமதேவன்
தி/சென் மேரிஸ் கல்லூரி
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை (திறந்த மட்டத்திலானது)**

1ம் இடம் :- **திருமதி ஜெயவதனி மரியதாஸ்**
தி/கலைமகள் வித்தியாலயம் திருகோணமலை.

2ம் இடம் :- **ஸ்ரீசன்ஞா ஸ்ரீகணேசலிங்கம்**
75 சிவன் வீதி
திருகோணமலை

3ம் இடம் :- **திருமதி அருளானந்தி விஜயராஜ்**
தி/கலைமகள் வித்தியாலயம்
திருகோணமலை

**கவிதை (திறந்த மட்டத்திலானது)**

1ம் இடம் :- ஏ. ஜெ. எம். சாலி
36/4 தக்கியா வீதி
திருகோணமலை.

2ம் இடம் :- **எஸ். முபீனா**
118/10 மூர்வீதி
திருகோணமலை

3ம் இடம் :- **திருமதி. வீ. அன்பழகன்**
93/2 முதியோர் இல்லவீதி,
திருகோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2005 - ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල සඳහා ත්‍රිකුණාමලය නගර හා කඩවත් ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාශ මට්ටමෙන් පැවැත් වූ ගද්‍ය රචනා හා කෙටිකථා තරඟයන් හි ජයග්‍රාහික ජයග්‍රාහිකාවන් පිළිබඳ විස්තර**

**ගද්‍ය රචනා තරඟය - 2005 (කනිෂ්ඨ)**

**ප්‍රථම ස්ථානය** :- මෙත් අනූපම බෝගහවත්ත,
7 වසර 'බී'
ත්‍රි/ සිංහල මධ්‍ය මහා විද්‍යාලය,
ත්‍රිකුණාමලය.

**දෙවන ස්ථානය** :- ඒ.පී. උදානි භාග්‍යා,
7 වසර,
ත්‍රි/ මිහිඳුපුර මහා විද්‍යාලය,
ත්‍රිකුණාමලය.

**තුන්වන ස්ථානය** :- එල්.එච්. හසනී තරුෂිකා,
6 වසර 'සී'
ත්‍රි / රාජකීය ජාතික පාසල,
ත්‍රිකුණාමලය.

**ගද්‍ය රචනා තරඟය - 2005 (ජ්‍යේෂ්ඨ)**

**ප්‍රථම ස්ථානය** :- එස්. පී. රුවින් සඳමාලි,
12 වසර,
ත්‍රි/ සිංහල මධ්‍ය මහා විද්‍යාලය,
ත්‍රිකුණාමලය.

**දෙවන ස්ථානය** :- සතෝජා කල්පනී ජයසූරිය,
ත්‍රි/ නාලන්දා මහා විද්‍යාලය,
චීනවරාය.

**තෙවන ස්ථානය** :- එන්. ඩී. මධුෂාණී ගුණතිලක,
12 වසර,
ත්‍රි / සිංහල මධ්‍ය මහා විද්‍යාලය
ත්‍රිකුණාමලය



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2005 - ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල සඳහා ත්‍රිකුණාමලය නගර හා කඩවත් ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාශ මට්ටමෙන් පැවැත් වූ ගද්‍ය රචනා හා කෙටිකතා තරඟයන් හි ජයග්‍රාහක ජයග්‍රාහිකාවන් පිළිබඳ විස්තර**

කෙටි කථා තරඟය - 2005 - (විවෘත තරඟයේ තරඟ ප්‍රතිඵල)

**ප්‍රථම ස්ථානය** :- පී. සාසංකා චාමලී මෙනවිය,
අංක: 137,
අභයරාම මාවත,
අභයපුර, ත්‍රිකුණාමලය.

**දෙවන ස්ථානය** :- සචිනි කෞෂල්‍යා පුංචිහේවා මෙනවිය,
11 ශ්‍රේණිය,
ත්‍රි/ නාලන්දා මහා විද්‍යාලය,
චීනවරාය.

**තෙවන ස්ථානය** :- සුනීතා තුඹවිල මිය,
ත්‍රි/ නාලන්දා මහා විද්‍යාලය,
චීනවරාය.

පද්‍ය තරඟය (කවි) - 2005 - (විවෘත තරඟයේ කරඟ ප්‍රතිඵල)

**ප්‍රථම ස්ථානය** :- එම්. එරංගා කසුන් මධුවන්තිකා සිල්වා
මෙනවිය,
8 වසර 'බී'
ත්‍රි/ නාලන්දා මහා විද්‍යාලය,
චීනවරාය.

**දෙවන ස්ථානය** :- ඒ. එස්. ඒ. අයේෂා ප්‍රියදර්ශනී මෙය,
12 වසර (කලා අංශය)
ත්‍රි/ සිංහල මධ්‍ය මහා විද්‍යාලය,
ත්‍රිකුණාමලය.

**තුන්වන ස්ථානය** :- පී. ඩබ්ලිව්. සසංකා චාමලී මෙය,
අංක: 137,
අභයාරාම මාවත,
අභයපුර,
ත්‍රිකුණාමලය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சாகித்திய விழா குழு - 2005

தலைவர் :- திரு. சுந்தரம் அருமைநாயகம்
(பிரதேச செயலாளர்)

செயலாளர் :- திருமதி ம. சத்தியபாமா
(கலாசார உத்தியோகத்தர்)

பொருளாளர் :- திரு. எஸ். கைலைநாதன்
(கிராம சேவை உத்தியோத்தர்)

இணைப்பாளர் :- திரு. எஸ். மகேந்திரராஜா
(மாவட்ட கலாசாரஉத்தியோகத்தர்)

பொதுக்குழு :-

திருமதி. ச. ஜலதீபன்
(உதவிப் பிரதேச செயலாளர்)

திரு. த. சிவசெந்தில்நாதன்
(கணக்காளர்)

திருமதி. மு. விஜயதாசன்
(திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்)

திரு. ந. சித்திரவேல்
(நிதி உதவியாளர்)

திருமதி. இ. பரஞ்சோதி
(பிரதமலிகிதர்)

ஜனாப். எம். ஏ. காதர்
(பிரதம லிகிதர் - ஓய்வூதியம்)

தா. பி. சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற அதிபர்)

த. சித்திஅமரசிங்கம்
(கலாபூசனம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதிக்குழு

திரு. எஸ். கைலைநாதன் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திரு. எஸ். சுதாகரன் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திரு. என். ஜெயகாந்தன் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திரு. எஸ். ஸ்ரீகணேசலிங்கம் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திருமதி. நந்திபால (கிராமசேவை உத்தியோகத்தர்)
ஜனாப். ராசிக்கீன் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திரு. எஸ். சந்திரசேகரன் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திரு. ரஞ்சித் பியசேன (கிராமசேவை உத்தியோகத்தர்)
திரு. என். நித்திய (சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)
திரு. அன்ரனி பற்றிக் (கிராமசேவை உத்தியோகத்தர்)

## மலர்க்குழு

திரு. சி. மகேந்திரராஜா (மாவட்ட கலாசார உத்தியோகத்தர்)
திருமதி. ம. சத்தியபாமா (காலாசார உத்தியோகத்தர்)
திருமதி. ல. சற்குணலிங்கம் (அபிவிருத்திதிட்ட உத்தியோகத்தர்)
திருமதி என். சுதர்சன் (சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)
**T.P.D.S.Welagedara (Samurdi manager)**
**N.K.Chandika Udayajeewa (C.O.)**

## நிகழ்ச்சி ஒழுங்குக்குழு

திரு.ரி. கிருஸ்ணமூர்த்தி (தொழிநுட்ப உத்தியோகத்தர்)
திரு. சு. பார்த்திபன் (விஞ்ஞான தொழிநுட்ப உத்தியோகத்தர்)
திருமதி. கே. காந்தரூபி (சமூர்த்தி முகாமையாளர்)
ஜனாப் முகமது அனஸ் (எழுத்தாளர்)
திரு. எஸ். ஐங்கரன் (திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்)
திரு. எஸ். மகேஸ்வரன் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திரு. எஸ். அருந்தவச்செல்வன் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திரு. ஏ. கிறிஸ்தோபர் (எழுது வினைஞர்)
திரு. அல்பிரட் (கிராமசேவை உத்தியோகத்தர்)
ஜனாப். லி. தாஜீடீன் (இராமசேவை உத்தியோகத்தர்)
ஜனாப். எம். அம்ஜாட் அலி (கிராமசேவை உத்தியோகத்தர்)
திருமதி. கே. ஜீ. ரஞ்சினி (தட்டெழுத்தாளர்)
திருமதி. H.W. கமலாவதி (எழுது வினைஞர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரக்குழு

திரு. எஸ். சிவகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
திருமதி. ஆர். நித்தியலக்சுமி (இலிகிதர்)
திரு. எஸ். சாந்தரூபன் (எழுதுவினைஞர்)
திரு. எஸ். துஸ்யந்தன் (அபிவிருத்தி உதவியாளர்)
திரு. ஏ. சிவானந்தம் (கிராம சேவை உத்தியோகத்தர்)
திரு. கே.நேமிநாதன் (காசாளர்)
திருமதி. பி. கௌரிதரன் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திருமதி.ஓ.விஜிதா (இலிகிதர்)
செல்வி. எஸ். ஸ்ரீஸ்கந்தகுமாரி (எழுதுவினைஞர்)
திருமதி.எஸ்.சசிகலா (இலிகிதர்)
திரு. சு. சோதிலிங்கம் (மனிதவள அவிபிருத்தி உதவியாளர்)
திரு.என்.சதீஸ்கண்ணா (வெளிக்கள உத்தியோகத்தர்)
திரு. J.P. ஜோன்பிள்ளை (விளையாட்டுதுறை உத்தியோகத்தர்)
திரு. எஸ் நிமலரஞ்சன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)
திரு. நி. விஜேந்திரன் (எழுது வினைஞர்)
திரு. எஸ் வாமதேவன் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திரு. எம். இராமநாதன் K.K.S
திரு. எம் யோகரா K.K.S
திரு. எஸ். கோணேஸ்வரன் K.K.S

உபசரணைக்குழு

செல்வி. எஸ். நிரஞ்சி (எழுது வினைஞர்)
செல்வி. P. கவிதா (எழுது வினைஞர்)
திரு. K. சுரேன் (எழுது வினைஞர்)
J. சுலக்சினி (எழுது வினைஞர்)
T. வசந்தலக்சுமி (தட்டெழுத்தாளர்)
செல்வி. சித்ரா (தட்டெழுத்தாளர்)
திருமதி. யோ. நவயுகன் ( தட்டெழுத்தாளர்)
K. மயுரதி (அபிவிருத்தி உதவியாளர்)
திருமதி. ஜெ. பிரியதர்சினி (சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)
S. டிலானி (மகளீர் அபிவிருத்தி உத்தியோகத்தர்)
செல்வி.சிவனேஸ்வரி (எழுதுவினைஞர்)
செல்வி பத்மராணி (எழுதுவினைஞர்)
றீட்டா பெர்னாண்டோ (எழுதுவினைஞர்)
திருமதி. என்.நளினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி வழங்கியோர் விபரம்

1. கலாசார அலுவல்கள் திணைக்களம் - 5000.00
2. திருகோணமலை ப.நோ.கூ.சங்கம் - 3000.00
3. அருணகிரி கிராம அபிவிருத்திச்சங்கம் - 3000.00
4. திருமதி. W.G.M.A. கலபதி
   சங்கமித்த ரோட், திருமலை - 3000.00
5. சண்டிக்கோ கிராம அபிவிருத்திச்சங்கம் - 2000.00
6. புளியங்குளம் கிராம அபிவிருத்திச்சங்கம் - 2000.00
7. பாலையூற்று கிராம அபிவிருத்திச்சங்கம் - 2000.00
8. யுவல் லங்கா யுவல்லரி, N.C. ரோட்,
   திருமலை - 2000.00
9. நவாமிலாஸ், N.C. ரோட்,திருமலை - 1500.00
10. பாரதிபுரம் கிராம அபிவிருத்திச்சங்கம் - 1000.00
11. கொர்ணேஷன், N.C. ரோட், திருமலை - 1000.00
12. ஸ்டார் யுவல்லரி, N.C. ரோட், திருமலை - 1000.00
13. இர்பான் அலுமினியம் 245, மத்தியவீதி,
    திருமலை - 2000.00
14. ''ஞானம் மெடிக்கல்ஸ், திருஞானசம்பந்தர் வீதி,
    திருமலை - 1000.00
15. ஸ்ரீராசா ஸ்ரோஸ், மத்தியவீதி, திருமலை - 500.00
16. அஜித்பேக்கவுஸ், அபயபுரம் - 500.00
17. கப்பல்துறை கிராம அபிவிருத்திச் சங்கம் - 1000.00
18. கப்பல்துறை மகளிர் கிராமஅபிவிருத்திச்சங்கம் - 1000.00
19. திருக்கடலூர் கிராம அபிவிருத்திச் சங்கம் - 2000.00
20. காந்தி நகர் கிராம அபிவிருத்திச் சங்கம் - 2000.00
21. நீரோட்டுமுனை கிராம அபிவிருத்திச் சங்கம் - 2000.00
22. சின்னம்பிள்ளை சேனை கிராம அபிவிருத்திச்சங்கம்-2000.00
23. சிங்கபுர கிராம அபிவிருத்திச் சங்கம் - 1000.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச கலாசார உத்தியோகத்தரும் - பிரதேச சாகித்திய விழா செயலாளருமாகிய

## திருமதி சத்தியபாமா மகேந்திரராஜா அவர்களின் நன்றியுரை

மக்கள் நல்வாழ்வுக்கு வழி காட்டுவது கலை இலக்கியமாகும். மக்கள் மகிழ்வுக்கும் பொழுது போக்கிற்கும் உரியன வாயும் கலை இலக்கியங்களே திகழ்கின்றது இதனைப் பெருமைப்படுத்தும் விழாக்கள் மானிட மேம்பாட்டையும் மக்களின் ஒற்றுமை உணர்வையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

வழமை போல் இம்முறையும் 2005ஆம் ஆண்டிற்கான பிரதேச சாகித்திய விழாவின் ஒழுங்கிற்கு, உதவி ஒத்தாசை வழங்கி விழா சிறப்புடன் நடைபெறுவதற்கு உதவிய அனைவர்க்கும் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளோம். இதன்படி பின்வரும் அனைவர்க்கும் மனமார்ந்த நன்றியினை விழாக்குழு சார்பில் தெரிவிக்கின்றேன்.

பிரதேச சாகித்திய விழாவினை நடத்துவதற்கு தலைமை தாங்கி வழி நடத்திய திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஆலோசனை வழங்கியோர் பிரதேச சாகித்திய விழா பாடசாலை மட்டத்திலான கட்டுரைப் போட்டிகளை நடாத்தி முடிக்க உதவிய திருக்கோணமலை வலயக்கல்விப்பணிப்பாளர் வலயக்கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், பங்கு பற்றி மாணவர்கள் மற்றும் சிறந்த போட்டியாக நடத்தப்பட்ட கவிதை சிறுகதைப் போட்டிகளில் பங்கு பற்றியவர்கள், போட்டிப் பெறுபேறுகளை நடுநிலை நின்று மதிப்பீடு செய்து உதவி வழங்கியவர்கள், இவ்விழாவின் பொருட்டு நிதி உதவி வழங்கிய நிறுவணங்கள் நலன் விரும்பிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்கிப் பெருமைப்படுத்திவர்கள், ஆக்கங்களை வழங்கியவர்கள் விழா மலருக்கான அட்டைப்படம் தயாரித்து வழங்கிய திரு. ஏ.சிவானந்தம் கிராம சேவை உத்தியோத்தர் மலரைச் சிறப்புற அச்சிட்டு வழங்கிய றெயின்போ மினிலப் பதிப்பகம், விழாவை நடத்துவதற்கு மண்டபத்தை தந்துதவியவர்கள் கலை விழாவிற்கு கலை நிகழ்ச்சிகளை வழங்கிய நிறுவனம், பாடசாலை, தலைவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் பங்குபற்றியவர்கள் விழாவிலே விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த உயர் அதிகாரிகள் பெரியோர்கள் மற்றும் கலந்து கொண்ட பெருமக்கள் அனைவர்க்கும் ஒலி, ஒளி அமைத்துத் தந்துவியர்கள் விழாவின் பொருட்டு பல வகையிலும் உதவி செய்த அனைவர்க்கும் -

நன்றி.

திருமதி. சத்தியபாமா - மகேந்திரராஜா
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
திருக்கோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) திருக்கோணமலை.

**எமது நிறுவனம்**

- ✦ நுகர்பொருள் விநியோகம்
- ✦ எரிபொருள் விநியோகம்
- ✦ வாகன வாடகைச் சேவை
- ✦ வாகன சுத்திகரிப்புச் சேவை
- ✦ ஆட்டோரிக்சோ சேவை
- ✦ பாடசாலை மாணவர்கள் கொப்பி, எழுதுபொருள் உபகரண விநியோகம்
- ✦ கனரகப் பொருட்கள் விநியோக சேவை
- ✦ சகல வித புடவை விற்பனை சேவை
- ✦ கோழிக்குஞ்சு, கோழிமுட்டை, கோழி இறைச்சி கோழித்தீன் விநியோகம்
- ✦ பால் விநியோகம்
- ✦ மரணச்சடங்கு வாகன சேவை
- ✦ எல்.பி.காஸ் முகவர் சேவை
- ✦ நவீன முறையிலான பதிப்பக சேவை

திருக்கோணமலை பிரதான வீதியில் நவீன கடைத்தொகுதி

- ▪ இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள்
- ▪ பாதுகாப்பான சூழலுடன் 24 மணிநேர சேவை
- ▪ ஆண், பெண், இருபாலாரும் தங்கும் வசதி
- ▪ பஸ் நிலையத்திலிருந்து 200 மீற்றர் தூரம்
- ▪ புகைவண்டி நிலையத்திலிருந்து 1 கிலோ மீற்றர் தூரம்.

வாருங்கள் பயனடையுங்கள் பலருக்கும் தெரியப்படுத்துங்கள்

**120, உட்துறைமுக வீதி,**
**திருக்கோணமலை.**

**தொலைபேசி : 026-2222353, 20078**
**பக்ஸ் : 026-2222353**

**பிரதான வீதி தொலைபேசி இல: 026-2222902**

என்றும் அன்புடன்
திருமலை ப.நோ.கூ.சங்கம்
திருக்கோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org